
பாரத மணி
24-9-39

N38 BM
N39

618 2

வாரப் பத்திரிகை 24-9-39




OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3-NOV 1939
MADRAS

முக்கிய விஷயங்கள்

— வர்த்தகச் சுதந்தரம் —

— பொருட் கவர்ச்சி —

— ஸ்டாலின் கொள்கை —

— இதுவும் ஒரு கதை —

காரியாலயம்: 7, வடக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை.

தனிப்பிரதி— ஒரு அணா வருஷ சந்தா ரூ. 4.

'E BHARATA MANI (A Tamil Weekly) Editor:
'th Mada St., Mylapore K. S. VENKATARAMANI

## இண்டோ கமர்ஷியல் பாங்கி லிமிடெட்.

ரிஜிஸ்டர்டு தலைமை ஆபீஸ் :- மாயவரம்
சென்ட்ரல் ஆபீஸ் :- சென்னை

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ... ரூ. | 25,00,000 |
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ... ரூ. | 21,25,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ... ரூ. | 17,54,368 |

சென்னை ஆபீஸ்கள்

ஆர்மீனியன் தெரு, சைனு பஜார் ரோடு, மாம்பலம், மைலாப்பூர்; திருவல்லிக்கேணி.

டைரக்டர்கள்

ஸ்ரீ டி. ஆர். வேங்கட்டராம சாஸ்திரிகள், சி.ஐ.இ.
ஸ்ரீ என். வி. ராகவன், (மாஜி அகவுண்டண்டு ஜனரல்).
ஸ்ரீ வி. வெங்கடராமய்யர், எம்.ஏ., பி.எல்.
ஸ்ரீ ஆர். விஸ்வநாதய்யர், பி.ஏ., பி.எல்.
ஸ்ரீ கே. சிவஸ்வாமி ஐயர்.
ஸ்ரீ கே. சுப்பய்யர்.
ஸ்ரீ ஆர். எஸ். யே. சங்கரய்யர்.
ஸ்ரீ எஸ். என். என். சங்கரலிங்க ஐயர், (மானேஜிங் டைரக்டர்)

## பரசுராம சித்த ஒளஷதாச்ரமம்

திருவண்ணாமலை (N. A. Dt.)

நீடித்த வியாதிகளை, முப்பு குருவால் செய்த ஒளஷதங்களால் நிவர்த்தி செய்யப்படும். டியூபர்குலோஸிஸ் என்ற க்ஷய ரோகத்திற்கும், நீரழிவு ரோகத்திற்கும் விசேஷ ஒளஷதங்கள் இருக்கின்றன.

### முப்புகுரு சேர்ந்த "சித்த எண்ணெய்"

இது சர்வரோக நிவாரணி, பரம சஞ்சீவி. ஒரு தடவை உபயோகித்தால் இதன் பெருமை தெரியும். அனேக டாக்டர்களால் பரிசீலனை செய்யப்பெற்றது. குழந்தைகள் பால் கட்டிகளுக்கும், ஈரல் கட்டிகளுக்கும் நிகரற்ற ஒளஷதம்.

ஸோல் டிஸ்டிரிபியூடர்கள் :

ஸாரதா ஸ்டோர்ஸ், காரைக்குடி.

ஸ்டாக்கிஸ்ட்ஸ் :

அப்பா அன்டு கம்பெனி, மதறாஸ்.
T. N. நாகலிங்கம் பிள்ளை, மதுரை.
மீனாக்ஷி ஸ்டோர்ஸ், தேவகோட்டை.
T. N. சொக்கலிங்கம் பிள்ளை, அண்டு சன்ஸ், மதுரை.


# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"
—பாரதி


ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

| மாலை 2 | ஞாயிறு 24-9-39 பிரமாதி௵ புரட்டாசி௴ 8௳ | முத்து 26 |
|---|---|---|



## பொருள் அடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| வர்த்தகச் சுதந்தரம் | ... ... ... ... ... | 800 |
| போகிற போக்கில் | ... ... ... ... ... | 803 |
| செய்தித் தொடர் | ... ... ... ... ... | 806 |
| தக்ஷிண திலகம் | ... வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதி | 807 |
| பொருட் கவர்ச்சி | ... ஆர். கே. விசுவநாதன், எம். ஏ., | 810 |
| ஸ்டாலின் கொள்கை | ... ... த. கிருஷ்ணமூர்த்தி | 812 |
| சந்திரனின் கடிதங்கள் | ... ... ... ... ... | 815 |
| இதுவும் ஒரு கதை | ... ... .... வி. எஸ். எஸ். | 816 |
| பத்மா | ... ... ... "மாலதி" | 820 |
| சிறுவர் பகுதி | ... ... எஸ். ஸோமாஸ்கந்தன் | 823 |
| பால வைத்யம் | ... ... பி. எஸ். ராமநாதையர் | 826 |
| மளிகைக்கடை மாணிக்கம் செட்டி | ... ... ஜி. பாலசுப்ரமண்யம் | 828 |
| வலை வீச்சு | ... ... ... ... ... | 830 |



"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

248893



# வர்த்தகச் சுதந்தரம்

ஆங்கிலேயர்கள் முதன் முதலில் இந்தியாவிற்கு வியாபார நிமித்தம் வந்தார்களென்றும், வியாபாரம் பண்ணியே இந்தியாவைக் கைப்பற்றினார்களென்றும் சரித்திரம் கூறுகிறது. பொருள் பேரத்தில் ஆரம்பித்து ராஜீய பேரத்தில் முடித்தனர். "ஆங்கிலேயர்களை வியாபாரத்தினாலேயே விரட்டியடிக்க வேண்டும்" என்று காந்திஜீ ஓரிடத்தில் கூறியிருக்கின்றார். நம் இந்தியா வெகுகாலந் தொட்டு விவசாயத்திற்குப் பெயர் பெற்றது. விவசாயம் செழித்திருக்கும் நாடுகளில் பொருள் உற்பத்தி செழிப்படையாது என்பது பலருடைய நோக்கம். ஆனால் சற்றேறக்குறைய இருபத்தைந்து வருஷங்களில் நம் நாடு இவ்வளவுதூரம் கைத்தொழிலில் அபிவிருத்தி யடைந்திருப்பதைப் பார்த்தும் இன்னும் அச்சந்தேகத்தை வைத்துக்கொண்டிருப்பது கையில் கனியை வைத்துக் கொண்டு "என் கையிலிருப்பது பழமா அல்லது மண்ணுருண்டையா?" என்று கேட்பதைப் போலிருக்கிறது. இச்சில வருஷ அனுபோகத்தினால் நம் நாடு விவசாய நாடாயிருந்தாலும் வியாபார நாடாவதற்கு முடியும் எனத் தெரிகிறது.

அந்நியர்கள் நம் நாட்டில் காலடிவைத்ததற்கு முன்பு இந்நாட்டிலிருந்து அந்நிய நாடுகளுக்கு விளைபொருள்கள் ஏற்றுமதி செய்ததுமல்லாமல் தொழிற் பொருள்களும் ஏராளமாக ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனால் அந்நியர்கள் நாட்டில் காலடி வைத்த அதிர்ச்சியில் நம் நாட்டு ஜீவ நாடிகளான கைத்தொழில்கள் பலங்குன்றித் தளர்ந்து விட்டன. அந்நியர்கள் அவர்கள் நாட்டுப் பொருள்கள் விற்பனையாகும் பொருட்டும், அதனால் பெருத்த லாபம் அடையும் பொருட்டும் நம் நாட்டுப் பல உயர்ந்த கைத்தொழில்களை உருப்படி தெரியாமல் நாசஞ்செய்து, மறுபடியும் தலைதூக்கா வண்ணம் அன்வ்கனுடைய உணர்ச்சிகளைச் சிதைத்து விட்டனர். ஆனால் தேசீயம் என்னும் உணர்ச்சி நாட்டின் குடிஜனங்களின் இருதயங்களைத் தாக்கவே தேசீயப் பொருள்களின்மீது அவர்கள் சிறிது பற்றுதல் கொள்ள ஆரம்பித்தனர். இவ்விதம் புத்துயிரடைந்த கைத்தொழில் நாளாவட்டத்தில் தேர்ச்சி பெற்றுத் தற்காலம் நல்ல நிலைமைக்கு வந்திருக்கிறது. பிற்காலம் உலகத்தை மிரட்டும் நிலைமைக்கும் வரலாம்.

தேசீய உணர்ச்சியில் புத்துயிரடைந்த கைத்தொழில்களில் நெசவுத் தொழில் ஒன்று. இப்பொழுது சகாய விலையுடன் உலாவும் இந்திய மில் துணிகளுக்கு வழிகாட்டியாக வந்தது கதராடைதான். கதராடை உற்பத்தியைக் கண்ட பலர் இந்தியாவிலேயே நாம் துணிகளையும் உற்பத்தி செய்யலாம் என்ற தைரியங்கொண்டு பல விடங்களில் நெசவாலைகள் ஏற்படுத்த ஆரம்பித்தனர். இதன் வாலைப் பிடித்துக் கொண்டுதான் சோப்புகள், செண்டுகள், சீப்புகள், பொம்மைகள் முதலிய கைத்தொழில் பொருள்கள் தைரியமாக இந்திய வியாபார அரங்கத்தில் தோன்றி ஆட ஆரம்பித்தன. ஓர் எளிய பென்சிலுக்கு அந்நிய நாடுகளை ஆவென்று வாயைத் திறந்து எதிர்பார்த்துக்கொண்டிருந்த இந்தியா இப்பொழுது காகிதங்களையே உற்பத்தி செய்வது ஓர் பெரிய ஆச்சர்யமல்லவா!





"ஆயுதஞ் செய்வோம், நல்ல
காகிதஞ் செய்வோம்,
ஆலைகள் வைப்போம், கல்விச்
சாலைகள் வைப்போம்."

என்று பாரதியார் கூறியது வீண் போகவில்லை.

"தேவை புதுக்கற்பனையின் தாய்" எனக் கூறினாரொருவர், ஒருவனுக்கோ அல்லது ஒரு நாட்டிற்கோ அல்லது உலகத்திற்கோ, தற்காலத்திற்குத் தகுந்தபடி தேவையான பொருள்கள் வேண்டுமானால், அத் தேவையினால் உண்டாகும் ஆசையைக் கற்பனையின் உதவிகொண்டு சிருஷ்டிக்கப்பட்ட பொருள்களால் நிறைவேற்றுகிறார்கள். இவைகளெல்லாம் அந்நிய நாடுகளில் நடக்கும் விஷயங்கள்! நம் நாட்டில் முன்பு கண்டுபிடிக்கப்பட்ட பொருள்களே இப்பொழுது தேவையாக இருக்கின்றன. அவைகளன்றி சூரியன் உதிக்கவும் அஸ்தமிக்கவும் மாட்டான் என்று நாம் நினைக்கிறோம்! அப்பொருள்கள் அகப்படாதிருந்தாலும், அதிக விலை கொடுத்து வாங்க முடியாமலிருந்தாலும் நமக்குத் தூக்கம் வருவதில்லை! இவ்வகைப்பட்ட பிரகிருதிகளுக்காவது நம் நாடு அவர்கள் கேட்கும் பொருள்களைச் சிருஷ்டிக்கவேண்டாமா?

நம் நாட்டில் சினிமாக்கலை எவ்வளவு தூரம் அபிவிருத்தி யடைந்திருக்கிறதென்று உங்களுக்கே தெரியும். இக்காலத்தில்தான் கஜகர்ணம் போட்டாலும் சினிமாத் தொழிலில் லாபம் வரவில்லையென்று நினைத்துக்கொண்டோ என்னமோ, புது பிலிம்களை அதிகமாகச் சேகரித்து வைத்துக்கொண்டு அவைகளை இப்பொழுது அதிக விலைக்கு விற்று முன்பு அடைந்த நஷ்டத்தைச் சரிக்கட்டுகிறார்களாம். ஒரு லக்ஷ ரூபாய் பெறுமானமுள்ள பொருளை மூன்று லக்ஷ ரூபாய்க்கு வாங்கும்படியான அவசரம் இப்பொழுது என்னவந்துவிட்டது. நம் இந்தியச் சினிமாக் கைத்தொழிலில் விழுந்து புரண்டு வெளிவந்திருக்கும் பிரபுக்கள் மிகச் சிலர். நேற்று திறந்திருந்த ஸ்டுடியோ இன்று மூடியிருக்கும். நேற்று மும்முரமாக வேலை செய்த கெமிரா இன்று ஓர் மூலையில் படுத்துத் தூங்கும். இவ்விதமிருக்கும் நிலைமையில் பணம்மட்டும் ஜலம் போல் கரைந்து வருகிறது. ஓர் படம் வெளிவருமானால் அதை முன்னால் இருவர் பிடித்திழுக்க, பின்னால் இருவர் பிடித்துத்தள்ள வேண்டிய நிலைமைக்கு வந்துவிடுகிறது. சினிமாக்கலை இந்திய மண்ணில் கால்வைத்து இருபது வருஷங்களாகின்றன. இத்தனை வருஷங்களாகியும் ஓர் இயந்திரத்திற்கு ஓர் திருகாணி வேண்டுமென்றால் மேல் நாட்டை அண்ணாந்து பார்க்கிறார்கள், பணத்தைச் சுண்டி யெறிந்தால் எல்லா சாமான்களும் கதறிக்கொண்டு வருகின்றன! ஆனால் தற்காலம் உலகம் இருக்கும் ஸ்திதியிலோ அவர்கள் இரண்டே இரண்டு வேலைகள்தான் செய்யமுடியும். ஒன்று அதிகப் பணம் கொடுத்துப் புதுப் பிலிம்களை வாங்கவேண்டும். இல்லாவிட்டால் ஸ்டுடியோக்களை மூடிவிட்டு "ஓ லக்ஷ்மணா"வென்று தலையில் துணியைப்போட்டுக்கொண்டு போகவேண்டியது. இதல்லாமல் நம் நாட்டிலேயே வேண்டிய பொருள்களைச் சிருஷ்டி செய்து எதற்காகத் திண்டாடவேண்டும்! அது மகா தொல்லை பிடித்த வியாபாரம். "இல்லாவிட்டால் இந்தியன் பெரட்டி விட்டானுக்கும்" என்று உதடுகள் படாமலே நாசூக்காகப் பேசிக் காலங்கழிக்கலாம். 'உண்மையாக உழைத்து முன்னுக்கு வருபவர்களுக்கும் உற்சாகம் அளிப்பதில்லை. நம் நாட்டில் செய்யமுடியாதது ஒன்றுமில்லை என்று சொல்பவர்களைக்கூடப் பைத்தியக்காரனுக்கும் நாடு இது.

இதுவரையிலும் ஜெர்மன் தேசம் ஓயாது ஒழியாது எவ்வித சலிப்புமின்றி காலையிலிருந்து மாலைவரையிலும் ஒரு மனிதனுக்கு என்ன பொருள்கள் வேண்டுமோ அவ்வளவையும் கேட்பதற்கு முன்பே நம் நாட்டிற்கு அனுப்பி வந்தது. இனிமேல் இன்னும் நாலைந்து வருஷங்களுக்கு அந்நாட்டிலிருந்து நாம் எவ்வித சகாயத்தையும் எதிர்பார்ப்பது

வீண். தூங்கிக்கொண்டிருந்தவர்கள் விழித்துக்கொள்ள வேண்டியதுதான். நம் நாட்டிலோ ஐஸ்வரியத்திற்குக் குறைவில்லை. அங்கியர்களைக் காட்டிலும் மூளையில் சிறந்தவர்கள் பலர் நம் நாட்டில் இருக்கின்றனர். ஆனால் தைரியந்தான் இல்லை.

நம் நாட்டில் தற்கால நாகரீகத்திற்கேற்றவாறு நவீனமான பொருள்களைச் செய்தால்தான் தற்கால ஜனங்களை வெகு சீக்கிரத்தில் வசீகரிக்கலாம். பல்குச்சியிலிருந்து பரந்த தளத்தையுடைய பெரிய நாவாய் வரையிலும் நம் நாட்டில் செய்ய, மனித சக்தி, ஆத்ம சக்தி, உலோகசக்தி, ஐஸ்வரிய சக்தி எல்லாம் புதைந்து கிடக்கின்றன. கைத்தொழிலை விருத்தி செய்வதற்கென்றே யாராவது முன்வந்தால் சின்னாட்களில் கனவுக்கெட்டாத முன்னேற்றத்தைக் கூட அவர்கள் கொண்டுவரக் கூடும். தற்சமயம் நம் நாட்டில் ஒவ்வொரு ஸ்திரீயும் அவரவர்கள் அணிந்து கொண்டிருக்கும் ஆபரணங்களைத் தேச சேவைக்குக் கொடுக்க முன்வருவார்களானால் நம் நாட்டிற்கு வர்த்தகச் சுதந்தர மட்டுமல்லாமல் தேச சுதந்தரமும் தானே வந்துவிடும்.


நம் நாடு வேறெந்த நாட்டுடனும் பகைகொள்ளவும் வேண்டாம், சிநேகம் கொள்ளவும் வேண்டாம். ஏனென்றால் நம் நாட்டாரால் அவர்களுக்கு உதவியும் செய்ய முடியாது, அவர்களுடன் யுத்தமும் செய்ய முடியாது. ஒரு நாட்டுடன் நாம் சிநேகம் செய்து கொண்டோமானால் அச்சிநேகிதம் மற்றொரு நாட்டிற்குப் பகையாக முடிகிறது. இரண்டும் நம் நாட்டிற்குக் கஷ்டந்தான். எவ்விதஞ் செய்தாலும் நம் நாட்டின் அழிவை நாமே தேடிக்கொள்வதாகும். உயர்ந்த கோபுரங்கள் சிதைந்து கிடப்பதைப் பார்க்க விருப்பமா? அல்லது ஊதும் குழாய் வழியே வானளாவப் புகையைப் பரப்ப விருப்பமா? கடற்றுறைமுகம் அழியப் பார்ப்போமா? அல்லது நாட்டுத் துறைமுகத்தினின்றும் நம் கப்பல் ஆழியில் மிதப்பதைப் பார்ப்போமா? ஒரு நாளும் நம் நாட்டின் அழிவை நாம் பார்க்கப் போவதில்லை. ஆழி நெடுங்கடலில் நம் நாட்டுக் கப்பல்கள் ஊர்ந்து செல்வதைப் பார்ப்போம்.

அஹிம்சையின் ஆயுதமான பகிஷ்காரத்தை நாம் நம் நாட்டுக் கைத்தொழில்கள் தழைத்தோங்க முன்பெல்லாம் பிரயோகித்தோம். ஆனால் இப்பொழுதோ மேல்நாட்டுப் பொருள்கள் நம்மைப் பகிஷ்காரஞ்செய்ய ஆரம்பித்து விட்டன. ஆகையால் இப்பொழுது பகிஷ்கார ஆயுதத்திற்கு வேலை கிடையாது. இதுவே தக்க சமயம் நம் நாட்டுக் கைத்தொழிலைச்|சீர்மைப்படுத்துவதற்கு. "இத்தருணம் விட்டால் மறுதருணம் வாய்ப்பதரிது" என்னும் சினிமா விளம்பரத்தை, நாட்டு விளம்பரமாக நாம் போற்றவேண்டும். பொருள்களை ஏராளமாக உற்பத்தி செய்து நம் நாடுபோன்ற பல ஏமாந்த சோணகிரிகளுக்கு அனுப்பிவந்த நாடுகளெல்லாம் ஒன்றன்மேல் ஒன்று விழுந்து கடித்துக் கொள்ள ஆரம்பித்து விட்டன. ஆகையினால் எவ்வித எதிர்ப்புமின்றி நம் வேலையை நாம் நிதானமாகச் செய்துகொண்டு கூடிய சீக்கிரம் வியாபாரத்தில் வெற்றிபெறலாம். மூண்டெழுந்து ஜ்வாலை வீசும் கடும்போர் நம் நாட்டை ஒன்றும் செய்யாது என்று துணிந்து இத்துறையில் நம் நாடு இறங்கவேண்டும். இந்தியாவுக்குத் தேவையான பொருள்களை முதலில் உற்பத்தி செய்துகொண்டு சென்றால் கூடிய சீக்கிரம் உலகத்திற்கே வேண்டிய பொருள்களை நாம் இங்கிருந்து ஏற்றுமதி செய்யலாம். இது வெறுங்கனவல்ல, நாம் எவனுக்கும் ஆறுமாதகால தவணையோ, வாயிதாவோ கொடுக்க வேண்டியதில்லை. வியாபாரத்தில் இந்தியா தலை குனியாவண்ணம் நிமிர்ந்து திக்விஜயம் செய்யலாம். பெரும்படியான தொழில் என்னும் கேடயத்தைக் கொண்டு நாம் எந்தப் பிரிட்டிஷ் அஸ்திரத்தையும் தடுக்கலாம். அப்புறம் இந்திய உலக வியாபாரம்! வியாபார

(805-ம் பக்கம் பார்க்க)



# போகிற போக்கில்



"பாரத மணிக்கு இன்றையதினம் கல்யாண நாள். ஆண்டு நிறைவு. சுபதினம். விழாவில் கலந்துகொள்ள நானும் தயாராயிருக்கிறேன். இந்த வாரத்தோடு ஐம்பத்திரண்டாம் முத்து முடிவுபெற்று மாலை ஈசுவரார்ப்பணத்திற்குப் பூர்த்தியாய்விட்டது.

பத்திரிகை உலகில் ஒரு மாலையைப் பூர்த்தி செய்வது மிகவும் சிரமம். அதில் பாடுபட்டுக் கைசோர்ந்தவர்களைத் தவிர இதர நண்பர்களுக்கு இதன் ஆயாசம் தெரியாது. விருந்து உண்பவர்கள் சமையலின் சிரமம் அறிவார்களா? சாமக்ரியைகள் சேர்க்கும் சிரமமும் ரஸம் தெரிந்து அடுப்பில் ஏற்றி இறக்கிச் சமைக்கும் பக்குவமும் உண்பவர்களுக்கு எப்படித் தெரியும்?

பத்திரிகைத் துறையில் வாரப்பதிப்பிற்குத் தனிக்கஷ்டங்கள் உண்டு. தினசரி பத்திரிகையின் தினசரி விடாத்தொண்டும், மாதப் பத்திரிகையின் குணங்களும் பளுவும் சுமந்து நிற்பதால் ஒரு வழியில் பார்க்கப்போனால் வாரப் பத்திரிகை நடத்துவது மிக்க கடின வேலையென்பதை, இதை உணர்ந்தவர்களெல்லோரும் ஒப்பக்கூடியதுதான். ஆகையால்தான் நமது நாட்டில் பத்திரிகைகள் மேலிட்டு வளர்ந்து முதல்ஆண்டு விழாகூட கண்டு களிப்பது அபூர்வமாய்ப் போய்விட்டது.

குழந்தைகளுக்குக் குலைக்கட்டிபோல் பத்திரிகைகளுக்கும் குலைக்கட்டிகள் பல உள. பத்திரிகைக்கு காகிதத்தைச் சரீரத்திற்குப் பித்தப் பைக்குச் சமானமாக ஒப்பிடலாம். மானிட வாழ்வின் ஆரோக்கியத்திற்கு பித்தப் பையின் நல்வாழ்வு எவ்வளவு இன்றியமையாததோ அவ்வளவு இன்றியமையாதது பத்திரிகையின் நேர்வாழ்விற்குக் காகிதத்தின் விலை.

* * *

மூங்கிலும், காட்டுப் புல்லும் மலைப்பிரதேசங்களில் காடு காடாய் வளர்ந்து தீயினால் அழிந்தாலும், நமது அடிமை நாட்டில் இந்தக் காகிதம் உற்பத்தி செய்வதில்லை. அன்னியநாட்டையே அண்டி, அறிவிற்கு அன்னம்போல் நிற்கும் இந்த உணவை இதுவரையில் தேடிக் கப்பலேற்றி விலைக்கு 1-க்குப் பத்தாக வாங்கி வருகிறோம். இப்படி நின்றால் பத்திரிகைகளுக்கு க்ஷேமம் ஏது? தன் பூமியிலேயே உணவு விளையாத நாட்டின் ஜனங்களின் கதிபோல் நெருக்கடி பத்திரிகைகளுக்கும் ஏற்பட்டுவிடுகிறது. காகிதப் பஞ்சம் உண்டாய் விடுகிறது. பத்திரிகைகள் இளைத்துப் போகின்றன.

ஐரோப்பாவில் மகா பாரதம் ஆரம்பித்துவிட்டது. பத்திரிகைக்கும் காகிதப் பஞ்சம் உண்டாய்விட்டது. பித்தப் பைக் குழப்பம், மயக்கம் ஏற்பட்டு விட்டது. இந்த குலைக்கட்டிக்கு வைத்தியந்தேட இதுதான் சரியான சமயம். நமது தேசத்தில் சர்க்காரின் உதவியைக் கொண்டே, சர்க்கார் நடத்தும் தொழிலாகவே எல்லாவித காகிதங்களும் உற்பத்தி செய்ய ஒரு தொழில் திட்டம் அவசியம் போடவேண்டும். இனி அன்னிய நாட்

டைச் சார்ந்து இந்த முக்கிய விஷயத்தில் நாம் நிற்கக் கூடாது.

பவுண்டு ஒன்றரை அணு விற்ற காகிதம் இப்பொழுது மூன்று அணு விற்கிறது. நாற்றுக்கு நூறு விலை கூடுதல் ஏற்படலாமா? நியாயமா? புது திட்டத்தில் பண்டங்கள் விலைகளை நிர்ணயம் செய்ய யுத்த சமயத்தில் சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கும் அதிகாரத்தை இந்த விஷயத்தில் ஏன் செலுத்தவில்லை? பத்திரிகைகள் நீடித்துச் சுகமாய் வாழ வேண்டுமென்றால் அதற்கு முக்கியமான தேவைகளை நமது நாட்டிலேயே தயார் செய்யவேண்டும்; அதற்கு வேண்டிய முயற்சிகளை நமது நாட்டுப் பத்திரிகைத் தலைவர்கள் உடனே கால தாமதம் செய்யாமல் எடுத்துக்கொள்வார்களென்று நம்புகிறேன்.

இத்தான் "பாரத மணி" யின் ஆண்டு நிறைவின் சமயத்தில், நான் வேண்டிக்கொண்ட முக்கிய வேண்டுகோள். குழந்தைக்கு அன்னத்தைச் சுலபமாய்த் தேடிவைத்தோமேயானால் ஆடையாபரணங்கள் தானாகவே வந்து விடும். வராவிட்டாலும் கேடு இல்லை. நீண்ட வாழ்விற்கு அழிவு இல்லை.

* * *

பத்திரிகைத் தொழிலில் பழக்கமில்லாத நண்பர்களுக்கு இந்த சமயத்தில் சில விஷயங்கள் நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். பத்திரிகைள் சந்தாவால் மாத்திரம் பிழைத்து வாழமுடிகிறதில்லை. நவீன நாகரிகம், இதர உதவிகள் அவசியம் வேண்டியிருக்கின்றன. விளம்பர உதவியோ, போட்டிப் பந்தயமோ, அதிர்ஷ்ட நம்பர்களோ, பேடண்ட் மருந்துகளின் லாபமோ, இவைகளைப் போலொத்த இதர உதவிகளைக்கொண்டுதான் தற்காலத்தில் பத்திரிகைகள் ஏறத்தாழ நடந்து வருகின்றன. இது நகரத்தில் பங்களாவில் வசிப்பவன் கிராமத்து வருப்படியைக் கொண்டு சுகவாசம் செய்வது போல்! இதனால் பத்திரிகைகளுக்கு நேரும் குறைகள் பல உண்டு. ஆனால், இப்பொழுது இப்படி இதர சாதனங்களைத் தழுவி அடிமைபோல் நிற்கும் பத்திரிகைத் தொழிலை நேர் செய்ய ஒரு வழிதான் உண்டு. இரண்டணு செலவு செய்து உற்பத்தி செய்யப்படும் பண்டத்தை ஓரணுவுக்கு வாங்கி, ஆண்டு அனுபவிக்க, பொது ஜனங்கள் ஒரே கட்டுப்பாடாய் இஷ்டப்பட்டால், இதர உதவிகளைத்தானே பத்திரிகைகள் தேட வேண்டியிருக்கிறது? ஆகையால் இதற்கு மருந்து ஒரு ஆசிரியர் கையிலுமில்லை. சந்தாதார்கள் கையில்தான் இருக்கிறது. அவர்களுடைய முழு ஆதரவும் குறைவு இல்லாமல் கிடைத்தால் பத்திரிகைகள் இதர உதவிகளைத் தேடாமலே நேர்வழியில்செல்லுமென்பதில் சந்தேகமேயில்லை. நான் ஒரு அணுதான் கொடுப்பேன்! எனக்கு 100 பக்கங்கள் அடங்கிய பத்திரிகை தான் வேண்டும் என்று கேட்டால், நெல்லோடு பதர் மாத்திரமல்ல, உமியையும்தான் தாராளமாகக் கலந்து சேர்த்து நல்ல சாக்கில்கட்டிச் சந்தையில் கொண்டுவந்து கூவி, சரியான தரகனைப் பிடித்து விற்கும் படியாக நேரிடும்!

* * *

நண்பர்களே, "பாரதமணி" யை உமி பதர் கலக்காமல் நன்றாய் நான் நடத்த வேண்டுமென்றால் நீங்கள் கருதினால் சந்தாதாரர்களின் உதவியை நான்முக்கியமாய்க் கோருகிறேன். தான் ஆரம்பத்தில் போட்ட திட்டம்போல் "பாரத மணி" யை நடத்த வருஷம் ஒன்றுக்கு ரூபாய் பத்தாயிரத்திற்குக் குறையாமல் சேகரம் செய்ய வேண்டியிருக்கிறது. இது யானைக் குட்டிக்குத் தீனி போடுவதுபோலிருக்கிறது! விளம்பர உதவியில்லாமல் இதைச் சந்தாதாரர்களிடமே வசூல் செய்வது உத்தமம்!

* * *

அடுத்த வாரம் முதற்கொண்டு சில சீர்திருத்தங்கள் "பாரதமணி"யில் கொண்டுவரலாமென்று நினைக்கிறேன். சென்ற வருஷம் ஓடியாடித் திரிந்ததில் நான் தெரிந்து கொண்டது என்னவென்றால், அரசியல், பொருளாதார கிராம முன்னேற்ற விஷயங்களில் பொது ஜனங்க





ளுக்கு ஏராளமான ஊக்கம் ஏற்பட்டிருக்கிறது. இதை யண்டி இனிமேல் "பாரதமணி"யில் இந்த விஷயங்களுக்குக் கூடுதலான பக்கங்கள் கொடுக்கலாமென்று நினைக்கிறேன். கூடிய சீக்கிரத்தில் அரசியல் சம்பந்தமான "கார்டூன்" களையும் இதர கைச் சித்திரங்களையும் "பாரதமணி"யில் பிரசுரிக்கலாமென்று எண்ணுகிறேன். ஆனால் இவைகளெல்லாம் பொது ஜனங்களின் ஆதரவைப் பொறுத்துத்தான் நிற்கிறது. என் உழைப்பில் திட்டந்தானே போடமுடியும்? பந்தக்காலும், கழியும், கீத்தும், கயிறும் நீங்கள் கொண்டுவந்து என்னிடம் கொடுத்தால் நான் களிப்புடன் திட்டம் போட்டு உங்களுக்கு ஒரு கோடைப் பந்தல் போட்டுக் கொடுக்கிறேன்! எனக்குக் கூலிகூட வேண்டாம்!


மணி.

---

802-ம் பக்கத் தொடர்ச்சி

அடிமை யென்னும் திருகாணி கழண்டு விழுந்தால், ராஜீய அடிமை யென்னும் விலங்கு தானே விழுகிறது. பின்பு

"வெள்ளிப் பனிமலையின் மீதுலாவலாம்,
அடிமேலைக் கடல் முழுதுங் கப்பல்
விடலாம்!"



# செய்தித் தொடர்

காங்கிரஸ் காரியக் கமிட்டி வார்தாவில் கூடிற்று. யுத்தத்தைப் பற்றிப் பல பிரச்னைகள் எழுந்தன.

காரியக் கமிட்டிக் கூட்டத்திற்கு ஜனாப் ஜின்னா அழைக்கப்பட்டார். ஆனால் ஜின்னா தனக்கு டில்லியில் அவசரமாக வேலையிருக்கிறதென்றும், தன்னால் வரமுடியாதது பற்றித் தன்னுடைய வருத்தத்தைத் தந்தி மூலம் தெரிவித்துக் கொண்டார்.

வைஸ்ராயும் மகாத்மாவும் மற்றுமொரு முறை சந்திப்பார்களெனத் தெரிகிறது.

காங்கிரஸ் காரியக் கமிட்டி, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் யுத்தத்தில் நுழைந்ததின் காரணம் என்னவென்றும், இந்தியாவைப் பற்றி என்ன எண்ணங் கொண்டிருக்கிறது என்றும் கேட்டது.

ஜனநாயகத்திற்கு உதவிசெய்ய முன் வந்திருக்கும் நவாப்களும் ராஜாக்களும் அவரவர்களுடைய சமஸ்தானத்திற்கு ஜனநாயகம் கொடுப்பது பற்றி ஏதாவது எண்ணங் கொண்டிருக்கிறார்களா வெனவும் கேட்கிறது.

தேஷ்முக் கொண்டுவந்த ஹிந்து ஸ்திரீகளின் விவாகரத்துச் சட்டம் மத்திய சட்ட சபையில் நிராகரிக்கப்பட்டது.

விலைவாசிகள் ஏறியதின் பலனாக வறுமைப் பிணி அதிகமாகவே, பல இடங்களில் கொள்ளைகளும் கொலைகளும் அதிகமாகின்றன. பல இடங்களில் குடி ஜனங்கள் மிராசுதார்களின் வீடுகளில் புகுந்து நெல் முதலிய தானியங்களைச் சூறையாடினர்,

நம் ராஜதானியில் ஜில்லா போர்டு எலக்ஷனில் காங்கிரஸ் நபர்கள் எதிர்ப்பின்றி தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர்,

கல்கத்தாவில் திடீரென்று ஆகாயப்படையெடுப்பு எச்சரிக்கைகள் ஒலித்தன. நாமதேயமில்லாத ஓர் ஆகாய விமானம் பறந்து சென்றதெனச் சொல்லப்படுகிறது.

போலந்தில் ஜெர்மன் செய்யும் அட்டூழியங்கள் சொல்லி முடியாது. எல்லாவற்றையும் அழிக்கும்படி, ஹிட்லர் உத்தரவிட்டுவிட்டார். வார்ஸா அழிந்துகொண்டே வருகிறது. லுப்லின் அக்னிமயமாக இருக்கிறது.

மேற்கெல்லையில் பிரஞ்சு சைன்யம் முன்னேறிக்கொண்டு வருகிறது. ஸார்ப்ரக்கன் பிரதேசத்தைச் சூழ்ந்துகொண்டுவிட்டது. ரைன் பிரதேசத்திலுள்ள குடிகள் வீட்டைக் காலி பண்ணுகிறார்கள்.

ஸப்மெரினை ஒழிப்பதற்கு ஆரம்பித்த பிரிட்டிஷ் நடவடிக்கைகள் விக்னமின்றி நடந்துவருகின்றன. ஜெர்மன் யூ படகுகளையும் பிரிட்டிஷ் கப்பல்கள் தாக்கி வருகின்றன.

ஜெர்மனி, வார்ஸாவைத் தன்னிடம் ஒப்படைக்கப் போலந்து அரசாங்கத்திற்கு ஓர் கட்டளை பிறப்பித்திருக்கிறது. ஆனால் போலந்து அதை மறுத்துவிட்டது. ஜெர்மனியின் முன்னேற்றம் வரவரக் குறைந்து வருகிறதென்று தெரிகிறது.

போலந்திலுள்ள ரஷ்யர்களைக் குரூரமாக அரசாங்கம் நடத்துகிறதென்று ரஷ்யா போலந்தின்மீது குற்றஞ் சாட்டியிருக்கிறது.

கிழக்கே ரஷ்யாவும் ஜப்பானும் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டன.

ரஷ்யத் துருப்புகள் போலந்தில் நுழைந்தன. இதை எவரும் எதிர்பாராததினால் எல்லோருக்கும் இதோர் பெருத்த கலவரத்தைக் கொடுத்திருக்கிறது.

ஜெர்மனியில் ஒரு கடையில் குண்டு வெடித்து சேதம் விளைவித்ததாம். ஆகாய விமான மந்திரி வீடும் சேதமடைந்ததாம்.

ஹிட்லரின் காரியதரிசி ஹெர் எர்னஸ்டு பால்ஸ் கொல்லப்பட்டார். அவர் இறந்தது ஓர் மர்மமாகவே இருக்கிறது. உண்மை தெரியவில்லை.

ஆஸ்திரியா மாஜி அத்யக்ஷகர் ஷுஷ்ணே சுட்டுக் கொல்லப்பட்டார். ஆஸ்திரியா சேனை ஜெர்மனிக்கு ஒத்தாசை செய்வதற்கு ஒத்துக் கொள்ளாததுதான் காரணமெனச் சொல்லப்படுகிறது.

"எச். எம். எஸ். கரேஜியஸ்" என்னும் பிரிட்டிஷ் யுத்தக் கப்பல் ஜெர்மன் நீர்மூழ்கியினால் தாக்கப்பட்டு அமிழ்ந்தது. அதிலுள்ள கப்பலோட்டி முதலியவர்கள் காப்பாற்றப்பட்டனர்.

ரஷ்யா போலந்தின்மீது படையெடுத்தாலும், போலந்தே அழிந்தாலும் யுத்தத்தை நிறுத்தமாட்டோமென பிரிட்டிஷும் பிரான்ஸும் கூறியிருக்கின்றனர்.

ரஷ்யோ ஜப்பான் ஒப்பந்தம் முறியாதென ஜப்பானில் அதிகாரிகள் நம்பிக்கொண்டிருக்கின்றனர்.



# தக்ஷிண திலகம்

(வரகவி—திரு. அ. சுப்ரமண்யபாரதி)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

தக்ஷிண திலகம் தேச சேவையில் ஈடுபட்டுச் "சுதேசமித்திரன்" பத்திரிகை நடத்தத் தொடங்குவதன் முன்பே, நம்முடைய நாட்டில், மேல் நாட்டு நவீன நாகரிக கோலாகல புருஷனுடைய ஆதிக்கம் வேரூன்றி முளைத்துக் கிளைவிடத் தொடங்கி, நம்மவருடைய சுதந்தர உணர்ச்சியைக் குறைத்து வந்தது; தாய் மொழியாகிய தமிழ்மொழியில் நம்மவர் அசிரத்தை காட்டத்தக்கபடி படாடோபப் பகட்டுகளை ஆங்கில பாஷையின் மூலம் காட்டி வந்தது; தேசாபிமானப் பான்மையைத் தன் தேச சரித்திரங்களின் போக்கை உயர்த்திப் பேசி, நம் தேச சரித்திரங்களின் போக்கைத் தாழ்த்திப் பேசுவதை உபாயமாகக்கொண்டு சிதைத்து வந்தது; நம்மவரிடத்தில் அரசியல் ஞானம் ஒரு சிறிதும் பரவுவதற்கிடமில்லாத வழியில், நம்மவரைச் சேவகா விருத்திக்காளாக்கி அமுக்கி வந்தது.

இவ்வாறாகவே தமிழரிற் பலர் தேசாபிவிர்த்திக்குத் தேச பாஷாபிவிர்த்தியே ஆதாரம்—என்னும் பெரியார் போதனையை, ஆங்கிலம் படித்து உத்யோக வேட்டையில் ஈடுபட்ட அந்தணர்கள் ஸந்தியாவந்தனத்தை அறவே மறந்துவிடுவதுபோல், மறந்துவிட்டனர்; கல்வியென்றால் ஆங்கிலக் கல்வி என்று பொருள் கூறவும், கற்றோர் என்றால் ஆங்கிலங் கற்றோர் என்று தீர்மானங் கொள்ளவும் துணிந்தனர்; தமிழ்க் கடிதத்தைக் கண்டால் "ஓ இது தமிழா? தமிழ் எனக்குத் தெரியாது" என்று வெட்க மானமில்லாமல் சொல்லிக் கொள்ளத் தலைப்பட்டனர்; சபையில் தமிழிற் பேசுவதைக் கௌரவக் குறைவாகவும் நினைத்துக்கொண்டனர்; நினைத்துக்கொண்ட பழக்கத்தில் தமிழ் பேசவுந் தெரியாதவர்களாய் — தமிழருமல்ல — ஆங்கிலேயருமல்ல — சட்டைக்காரர் என்று கூறும்படி உலாவினார்கள்; படித்துப் படித்து இளைத்து எலும்புக்கூடு போன்ற உடம்புபெற்ற அவர்கள், உத்தியோகம் செய்வதில் உவப்புக்கொண்டனர்; தாம் செய்வது அதமமான சேவகா விருத்தியென்பதைச் சிறிதும் சிந்தியாதவராயினர்; இவைமாத்திரமா? பிறர் தமிழிற் பேசினால் செவிகொடாமலிருக்கவும், கடிதம் எழுதினால் வாசித்துப் பாராமல் அதனை யெறியவும் துணிந்தனர்.

ஆண் பிள்ளைகள் இவ்வாறு மாறினார்களானாலும், பெண் பிள்ளைகள் இப்போதிருப்பதுபோல் கோணல்வகிடும் குலுக்கு நடையும் பவுடர் முகமும் பகட்டுடையும் பரிமளப்பூச்சும் கொள்வதிற் பிரியமுடையவராகாவிட்டாலும் — தங்கள் பதியினுடைய நாகரிகப் போக்கை அநுசரித்து நடக்கவேண்டிய அவசியத்துக்குள்ளாயினர்; அடுப்பங்கரையில் சில ஆங்கில மொழிகளையும் தமிழ்மொழிகளோடு கலந்து பேசலாயினர்; உத்தியோகஸ்தன் மனைவிக்குப் பெருமையும் குடித்தனக்காரன் மனைவிக்குச் சிறுமையும் காட்டத் தொடங்கினர். இச்சமயம் அவர்களுக்குள் மாப்பிள்ளைப் பாட்டாக ஏற்பட்ட சில வேடிக்கைப்பாட்டுகளுமுண்டு. அவைகளில் ஏலப்பாட்டொன்று. அது—ஏலேலோ — என்று தொடங்கி முடிக்கில்—

"இங்கிலீஷ் என்ற எழுத்துத் தெரியாது
ஏற்ற மரமேறி இறைச்சு வருவான்
உத்யோகம் செய்வதின் ஓசத்தி
[தெரியாது

உழவுக் கடாப்போல்உழைச்சு வருவான்
நாகரிக வழியிலே நடக்கத் தெரியாது
"நான்ஸென்ஸ்" என்றால் அர்த்தந்
[தெரியாது.
'பூட்ஸ்' போட்டுக்கொண்டு நடக்கத்
[தெரியாது.
போலீஸ்காரன் என்றால் ஓட்ட
[மெடுப்பான்"

என்றெல்லாம் கற்பனைகளுடையதாய் முடிவில், "எலேலோ — நாகரிகம் — எலேலோ—சுகபோகம்"—என்ற மங்களமுடையதாயிருக்கும்.

இவ்விபரீதங்களை உணர்ந்த நம் நாட்டுப் பெரியார் பலர், அந்த நவீன நாகரிக ஆதிக்கத்தை அடக்கி யொடுக்கி நம் நாட்டுக்கு நலமளிக்க, தத்தமக்கியன்ற துறையில் இறங்கி உழைக்க முன்வந்தனர். அவைகளுள் நம் ஐயர் அவர்கள் மேற்கொண்ட துறையாகிய பத்திரிகைப் பிரசாரமே, பல நக்ஷத்திரங்களுக்கிடையில் தேசீய உணர்ச்சி யென்னும் கிரணங்களுடன் உதித்த சந்திரனென விளங்கியது. அந்தச் சந்திரன் குறைவதும் தேய்வதுமில்லாத சந்திரனானதால், நம்மவருள் பரவிய அக்ஞான அந்தகாரம் விலகத் தன்னிகரற்ற தன்னுடைய குளிர்ச்சி பொருந்திய நிலவை நிலவ வைத்தது.

அதனால் நம்மவரிற் பலர்— "அந்தோ! நவீன நாகரிக மோகம் நம்மை மயக்கி விட்டதே! சுதந்தர உணர்ச்சியை இழந்தோமே! பாஷாபிமானத்தை விட்டோமே! தேசாபிமானத்தை மறந்தோமே! அரசியல் ஞானத்தைக் காணோமே!" என்று சிந்திக்கத்தக்க தெளிவை யடைந்து அவைகளைப் பெற ஆவல்கொண்டனர். அந்த ஆவல் தோன்றக் காரணமாயிலகிய, "சுதேசமித்திர"னை அநேகர்—ஆங்கிலங் கற்றுத் தமிழை மறந்தவர்களுங்கூட, தம் தம் வீட்டிற்கழைத்துச் சீராட்டிப் பாராட்டி உபசரிக்கலாயினர். பின்னர் அந்த அரிய "மித்திர"னை ஈன்ற தந்தையாகிய ஐயர் அவர்களுக்குத் "தக்ஷிண திலகம்" என்று பெயர் சூட்டி ஆராதிக்கலாயினர்.

தமிழ் நாடு இவ்வாறு விழித்துக் கொண்டு வேலை செய்ய முன்வரக்கண்ட ஐயருக்கு உற்சாகமும் ஊக்கமும், வேள்வி செய்ய முற்பட்ட விசுவாமித்திரருக்கு ஸ்ரீராம லக்ஷ்மணர்களைப்போல் ஒன்றை விட்டு ஒன்று க்ஷணமும் பிரியாத கட்டுப்பாட்டில் நின்று துணைபுரிந்தன. இப்போது ஐயர் அவர்கள் "இந்து"ப் பத்திரிகையில் தமக்கிருந்த பொறுப்புகளைத் தம்முடைய நண்பராயிருந்து தமக்குதவி புரிந்து வந்த திரு. வீரராகவாச்சாரியார்—என்பவரிடம் ஒப்புவித்துவிட்டு—ஒரு செய்யாளைப் போல் தம்முடைய கவனத்தை யெல்லாம் "மித்திர"னிடம் காட்டி வந்தார்.

ஐயர் அவர்கள் வீரவைராக்கியமுடைய விவேகியாதலால், தேசாபிமான மென்னும் ஆவேசத்தில் துருவ சக்கரமெனச் சுழன்றார். அதன் காரணமாக "மித்திரன்" தினசரியாயிற்று. தீவிர உழைப்பு இவ்வாறு பழுக்கவே ஐயர் அவர்கள் எழுதுவதோடமையாது, தேசீயப் பிரசங்கம் செய்வதிலும் ஊக்கங் காட்டினர்.

ஐயர் அவர்கள் தம் நாடு ஸ்வதந்திரம் பெற்று ஸ்வராஜ்ய நாடாக வேண்டுமென்கிற தாகமுடையவராகையினால், தாம் கொண்ட தீர்மானங்களை எழுத்திற் காட்டி வந்ததுபோல், பிரசங்கத்திலும் தைர்யமாய் வெளியிட்டு மகிழ்வார். அரசியல் துறைகளில் இறங்கினால்—அரசாங்க விரோதத்தின் காரணமாகச் சிறைச்சாலை வாசமும் தம்மைத் தொடரும் என்பதை ஐயர் நன்றாயறிவாராதலால், பிறர் அபிப்பிராயத்தை உதறிப் பேசி உண்மையை நிலைநாட்ட வேண்டிய இடத்தில்—நிர்த்தாக்ஷண்யமாய்ப் பூவாணம் போல் விஷயங்களைப் பொழிந்து வீரகர்ஜனை காட்டிக் கட்டுக்கடங்காச் சிங்கமெனக் கம்பீர தோரணையில் விளங்குவார்.

ஐயர் அவர்கள் உருவத்தில் உத்தர திலக மெனப் பெயர் பெற்ற லோகமான்ய பாலகங்காதர திலகரைப்போல் குட்டையாகவே இருப்பார். இதனால் ஐயர் அவர்களுடைய அபிமானிகள், ஐயர்





அவர்களைக் காணும் போதும் நினைக்கும் போதும் பாலகங்காதர திலகரையும் நினைத்து மகிழ்வார்கள். இவரைத் தக்ஷிணதிலகம் என்றும் சொல்வார்கள்.

இவ்வாறு ஐயர் அவர்கள், பத்திரிகை வாயிலாகவும் ப்ரஸங்கவாயிலாகவும் கிளர்ச்சி செய்ததன் பயனாக, நாட்டில் எங்கே பார்த்தாலும் தேசீய உணர்ச்சி காலை நிழல்போல வளரத் தொடங்கியது. எங்கும் ஒருவிதமான அமைதியின்மை பரவியது. 'நமது தேசம் இருக்க வேண்டிய நிலையில் இல்லை; பூர்வீக நாகரிகத்திலும் செல்வத்திலும் பயிற்சிலும் உன்னத நிலையிலுமிருந்து நழுவிப் போயிருக்கிறது; பண்டைக்காலம் போல் நாடு உன்னத நிலையை அடைய வேண்டும். அதற்கு நம்முடைய தீவிர முயற்சியே காரணம்—" என்று எங்கும் பேச்சு பரவியது. இதற்கேற்ப ராஜாங்கத்திலும் திருத்தம் ஏற்பட வேண்டு மென்கிற எண்ணங் கொண்ட தேசாபிமானிகள் பலர் தோன்றினர். ஐயர் அவர்களுக்கு இக்காலத்தில் நமது ஆசாரங்களில் தேசமுன்னேற்றத்திற்கு இடையூறு விளைவிப்பனவா யிருப்பனவற்றைத் திருத்த வேண்டுமென்கிற எண்ணம் உண்டாயிற்று. பிற்காலக் கல்விக்குத் தற்காலக் கல்விப் பயிற்சியே ஆதாரமென்ப துணர்ந்து ஐயர் அவர்கள் அதையுங் கவனிப்பதில் சித்தங் கொண்டனர். நம் நாடு பற்பல மதத்தினர் வசிக்கு மிடமாதலின் இங்கே மத விஷயத்தில் பிளவுண்டாகாம லிருக்க வேண்டுமென்கிற கவலையும் ஐயருக்குண்டு.

தேச உத்தாரணம் செய்வதற்குரிய இவ்வளவு தீர்மானங்களையும் ஐயர் அவர்கள் தமது மூளையில் வைத்துக்கொண்டு நாடோறும் பத்திரிகைக்கு விஷயம் எழுதத் தொடங்குவார். ஆனாலும்—ஏந்த விஷயத்தைப்பற்றி எழுத நினைத்தாலும், அந்தவிஷயத்திற்கு அநுகுணமானபோக்கில் அதனை முடிப்பதில் அஷ்டாவதானிகளைப்போல் அவர்க்கு எவருக்கும் அமைந்திராத சாமர்த்தியம் அமைந்திருந்தது. அப்போது அவருடனிருந்து பழகியவர்களுக்காவது அல்லது "மித்திர"னில் அதன் தலையங்கத்திற் பலவற்றைப் படித்தவர்க்காவது தெரியாமலிராது.

இக்காலத்தில் ஒரு நாள் வழக்கம் போல் ஐயர் அவர்கள் வீட்டில் நாங்களிருவரும் விஷயம் எழுத உட்கார்ந்தோம். உட்கார்ந்தவுடன்—மயிலாப்பூரில் வசித்து வந்தவரும், சென்னை—ஹைகோர்ட்டில் நீதிபதியாயிருந்து வந்தவருமாகிய ஸ்ரீ பாஷ்யம் ஐயங்கார் அவர்கள் அன்றைக்கு முதல் நாள் திடீரென்று காலஞ் சென்றதை நினைத்துக்கொண்டார். உடனே "எழுது—காலஞ்சென்ற ஸ்ரீ பாஷ்யம் ஐயங்கார்"—என்று தலைப்பெயர் கூறி, உடனிருந்து பழகியவர் போல், அவருடைய பிறப்பு, வளர்ப்பு, படிப்பு, சட்ட ஞானம் எல்லாவற்றையும் சொல்லிக்கொண்டே வந்து, அவர் வக்கீல் தொழிலில் பணம் தேடியதைப் பேசுகையில்—"பணத்தைத் தேடிக் குவித்தார் லக்ஷக் கணக்கில்! வயிரமும் கெம்பும் ரவையும் வைத்திழைத்த நகைகளைப் பண்ணிப் பண்ணிப் பூட்டினார் தம் மனைவிக்கும் மக்களுக்கும்! பாங்குக்கு அனுப்பி க்ஷேமநிதி சேர்ப்பதில் கண்ணாயிருந்தார்!"—என்று விஷயத்தைக் கொட்டினார். கடைசியில் அவர் உலகுக்குச் செய்த தர்மத்தைப் பற்றித் தெரிவிக்கையில்—"திருவல்லிக்கேணியில் கோஷா ஆஸ்பத்திரியில் அவர் தம்முடைய மனைவியின் பேரால் பிரஸவ விடுதியொன்று அமைத்திருக்கின்றாரே இதைத் தவிர வேறு சொல்வதற்கில்லை" என்ற முடிவுரையோடு அவர் அதிகமாகத் தர்மஞ் செய்யவில்லை என்பதை வெளியிட்டு விஷயத்தை முடித்து உடனே—தாளம் போட்டுக் கொண்டே,

(பல்லவி)
"பணமே உன்னால் என்ன குணமே—தண்டம்
பண்ணினேன் சற்றுமென்
கண்ணின் முன் நில்லாதே (பண)
(அநுபல்லவி)
மணமில்லா மத மோகங்குரோதந் துன்
மார்க்கமும் மூர்க்கமும் யார்க்குமே
போதிக்கும்—"(பண)

(811-ம் பக்கம் பார்க்க.)

# பொருட் கவர்ச்சி

## (Gravitation)

(ஆர். கே. விசுவநாதன், எம். ஏ., அண்ணாமலை சர்வகலாசாலை)

கிரகங்கள் வானத்தில் ஒழுங்குடன் செல்வதைக் கவனித்து அதற்குண்டான விதிகளைத் தொகுத்து முதன் முதலில் எடுத்துரைத்தவர் 'கெப்ளர்' (Kepler) என்னும் ஜெர்மனி தேசத்து விஞ்ஞானி தான். அதன் பொருட்டு அவ்விதிகள் 'கெப்ளர்விதிகள்'' என்று வழங்கப்பட்டு வருகின்றன. அவையாவன:

1. எல்லா கிரகங்களும் சூரியனை ஒரு கேந்திரத்தில் (Focus) கொண்ட ஆயுதங்களில் (Ellipses) சஞ்சரிக்கின்றன.

2. சூரியனையும், ஏதேனுமொரு கிரகத்தையும் சேர்க்கும் நேர்கோடு சமகாலங்களில் சமபரப்புகளைக் கடந்து செல்லுகின்றது.

3. கிரகங்கள் சூரியனைச் சுற்றி வரும் கால அளவுகளின் வர்க்கங்கள் சூரியனுக்கும் கிரகங்களுக்குமுள்ள சராசரி தூரங்களின் மும்மைக்கு நேர் விகிதமாக இருக்கின்றன.

ஏன் கிரகங்கள் எல்லாம் சூரியனைச் சுற்றி ஆயுதவடிவு கொண்ட சுவட்டில் செல்ல வேண்டுமென்பதற்குக் காரணம் கெப்ளரால் அறிய முடியவில்லை. அவருக்குப்பின் வந்த நியூடன் (Newton) என்ற பிரபல விஞ்ஞானியால் தான் இது சாத்தியமாயிற்று. இதைப்பற்றி ஒரு சம்பவம் கூறுவதுண்டு. ஒரு நாள் சாயந்திரம் அவருடைய தோட்டத்தில் ஆழ்ந்த சிந்தனையுடன் அவர் உட்கார்ந்திருக்கும்பொழுது அவர் முன் மரத்திலிருந்து ஒரு கனி விழுந்தது. அதனால் அவருடைய சிந்தனை கலைந்து அக்கனியின்மீது சென்றது. இக்கனியின்மீது பூமி கவர்ச்சி சக்தி தொழிற்படுவதுபோல் ஏன் கிரகங்களிற்கும் சூரியனுக்குமிடையே ஒரு கவர்ச்சி சக்தி இருக்கக் கூடாது என்ற எண்ணம் அவருக்குத் தோன்றிற்று. தோன்றவே அவருக்கு முன் கெப்ளரால் கண்டு பிடிக்கப்பட்ட கிரகசார விதிகளை ஆராய்ந்தார். அவைகளிலிருந்து கிரகங்கள் ஆயுத வடிவு கொண்ட சுவட்டில் செல்வதற்கு அவைகளுக்கும் சூரியனுக்குமிடையே உள்ள கவர்ச்சி சக்திதான் காரணம் என்று அறிந்தார். மேலும் அச்சக்தியின் அளவுக்குண்டான வாய்பாட்டையும் எடுத்துக் காட்டினார். அதாவது இரண்டு பதார்த்தங்களுக்கு மிடையே உள்ள கவர்ச்சிசக்தி அவற்றின் நிறைகளுக்கு (Masses) நேர் விகிதமாகவும், அவற்றினிடைத் தூரத்தின் வர்க்கத்திற்கு எதிர் விகிதமாகவு முள்ளது என்று எடுத்துரைத்தார். இதை "நியூடன் பொருட் கவர்ச்சி விதி" அல்லது பொருள் "ஆகர்ஷண விதி" என்பார்கள். இவ்விதி கிரகங்களுக்கு மட்டும் அன்றி, பூமியின்மீதுள்ள பொருள்களுக்கும் பொருந்தும் என்று காட்டினார். இதை நிரூபிப்பதற்கு பூமிக்கும் சந்திரனுக்குமுள்ள கவர்ச்சி சக்தியைக் கணக்கிட்டு, உயரத்திலிருந்து பூமியின்மீது விழும் பொருள்களின்மேல் தொழிற்படும் சக்திக்கு அது ஒத்திருப்பதைக் காட்டினார். தவிர நெப்டியூன் (Neptune) என்னும் கிரகம் இவர் விதியைக்கொண்டு தான் கண்டு பிடிக்கப்பட்டது.

இதிலிருந்து ஒவ்வொரு பொருளையும் சூழ்ந்து கவர்ச்சிப் புலமொன்று இருக்க வேண்டுவதை உணரலாம். இப் புலத்தின் வலிமை அப் பொருளின் நிறைக்கு ஏற்பவிருக்கும். பூமியின் நிறை மிகப் பெரியதாகையால் அதன் மீதுள்ள எல்லாப் பொருள்களும் பூமியால் கவரப்படுகின்றன. நிற்க, காந்த துருவங்களுக்கிடையேயுள்ள சக்தியின் வலுவுக்கும், மின் துருவங்களுக்கிடையே யுள்ள சக்தியின் வலுவுக்கும் தனித்தனி யுள்ள வாய்பாடு மேற்சொன்ன பொருட் கவர்ச்சி சக்திக்குண்டான வாய்பாட்டை ஒத்திருப்பதை அறியலாம்: அதாவது பொருட் கவர்ச்சிப் புலம், மின்புலம், காந்தப் புலம் இவற்றின் வலுவுக்குரிய வாய்பாடு எதிர் வர்க்க விதியை அடிப்படையாகக் கொண்டிருப்பது என்பதே. மின் புலம், காந்தப் புலம் இவைகளிரண்டும் சில வஸ்துக்களிடத்தில் அதிகப் பற்றுக் கொண்டது. ஆனால் பொருட் கவர்ச்சிப் புலத்திற்கு அவ்வாறில்லை.

பௌர்ணமியிலும், அமாவாசையிலும் கடல் பொங்கி வருவதைப் பார்த்திருக்கலாம். அந்நாட்களில் கடலில் மிகப்பெரிய அலைகள் உண்டாகிக் கரையை மோதும். இதற்குக் காரணம் என்னவெனில் அந்நாட்களில் சூரியன், பூமி, சந்திரன் மூன்றும் ஒரே நேர்கோட்டில் இருக்கின்றன. பூமியைச் சூரியன், சந்திரன் இரண்டும் கவர்கின்றன. பூமியின் மேற்பரப்பிலிருக்கும் நீர் குவிந்து அதனால் பெரிய அலைகள் உண்டாகின்றன. சூரியனின் நிறை சந்திரனை நோக்கமிகப் பெரியதானாலும் சந்திரன் பூமிக்குச் சமீபத்திலிருப்பதால் சந்திரனுடைய கவர்ச்சிதான் அதிகமானது. ஆகையினால் இவ்வலைகள் பெரும்பாலும் சந்திரனுடைய கவர்ச்சியினால் ஏற்படுகின்றது என்று உணரலாம்.

சமீபத்தில் ஐன்ஸ்டைன் (Einstein) என்ற விஞ்ஞானி நியூடன் பொருட் கவர்ச்சி விதியில் சிறு திருத்தம் செய்ய வேண்டுமென்று காட்டினார். பொருள்களுக்கிடையே உள்ள சக்தி அவற்றின் நிறைகளைச் சார்ந்திருக்கின்றது என்று பார்த்தோம். இந்நிறைகளின் அளவு, பொருள்கள் செல்லும் வேகத்தைச் சார்ந்ததென்றும், மிகச் சிறிய பொருளும் அதிக வேகத்தைக்கொண்டிருப்பின் மிகுந்த நிறையை அடைந்திருக்குமென்றும் காட்டினார். இவர் திருத்தத்தை ஒப்புக்கொள்ள விஞ்ஞானிகள் மறுத்தார்கள். இதற்கு ஒரு பரிசோதனை செய்யப்பட்டது. பதார்த்தங்களெல்லாம் மின்னுருக்களாலானவை (Electrons) என்றும், இம்மின்னுருக்கள் ஓடும் பொழுது மின்னருவி ஏற்படுகிறதென்றும், அவைகள் ஆடும்பொழுது ஒளி உற்பத்தியாகின்றதென்றும் நவீன ஆராய்ச்சிக்காரர்களினால் அறியப்பட்டது. ஆகையால் பொருளும், ஒளியும் ஒரே தன்மையைக்கொண்டிருக்கும் பக்ஷத்தில் ஒளியும் மேற்சொன்ன கவர்ச்சி விதிக்கு ஏன் உட்படக் கூடாது என்று ஐன்ஸ்டைன் நினைத்தார். ஒரு நக்ஷத்திரத்திலிருந்து வரும் ஒளி சூரியனுக்குச் சமீபத்தில் வரும்பொழுது அதனால் அவ்வொளிக் கிரணங்கள் கவரப்படவேண்டுமென்றும், அதன்பொருட்டு அந்நக்ஷத்திரம் தன் உண்மைநிலையிலிருந்து விலகித் தோன்ற வேண்டுமென்றும் கூறினார். இவ்விலக்கத்தை நிறைக்குவேண்டிய கதித்திருத்தத்துடன் கணக்கிட்டார். நியூடன் வாய்பாட்டின்படியும் விலக்கத்தைக் கணக்கிட்டார். இவ்விரண்டிலும் எது சரியென்று காண்பதற்கு 1919 ஆம் வருஷம் மே மாதம் 19ம் தேதியன்று ஏற்பட்ட பூரண சூரிய கிரஹணத்தின் பொழுது பிரபல ஆராய்ச்சிக்காரர்களால் சோதனை நடத்தப்பட்டது. அவர்கள் தக்க கருவிகளைக்கொண்டு இவ்விலக்கத்தை அளந்தார்கள். ஐன்ஸ்டைன் கணக்குத்தான் சரியென்று நிரூபிக்கப்பட்டது. அதிலிருந்து அவர் புகழ் உலகமெங்கும் பரவிற்று.

(809-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று பாடி—"பாரதி, இதை யார் பாடியது?'' என்று கேட்டார்.

நான்—"வேதநாயகம் பிள்ளை!" என்றேன். ஐயர்— "பாடி விடுகிறார்கள் இப்படியெல்லாம் வித்வான்கள்! இந்தப் பணம் கையிலில்லா விட்டால்—(விரலைச் சுண்டிக் காட்டி) அப்போது தெரியும் இந்தப் பாட்டெல்லாம்! "திரைகடலோடியும் திரவியம் தேடு—" "தேடா தழிக்கிற் பாடாய் முடியும்" என்றாளே கிழவி, அவளே கெட்டிக்காரி! அவள் வாய்க்குச் சக்கரை போடணும்!" என்று கூறி வழக்கம்போல் கர்ஜித்தார்.

# ஸ்டாலின் கொள்கை

(த. கிருஷ்ணமூர்த்தி)

ஹிட்லரும் ஸ்டாலினும் சென்ற மாதம் செய்து கொண்ட அனாக்கிரமிப்பு உடன் படிக்கையைக் கண்டு உலகம் ஆச்சரிய முற்றது. நாஜி இயக்கமும் பொது உடைமையும் ஒன்று சேராதெனப் பல வல்லரசுகளும் எண்ணி அதற்குத் தகுந்தாற்போல் தங்கள் வெளிநாட்டுக் கொள்கையையும், ராணுவ பலத்தையும் அமைத்து வந்தன. அவைகளுக்கு இவ்வொப்பந்தம் ஒரு வெடிகுண்டு போலிருந்தது என்பது மிகையாகாது. ஸ்டாலின் ஹிட்லருடன் சமரசம் பேச விழைகிறாரென்றும் அவ்வாறான காரியம் அதிசயிக்கத் தக்கதல்லவென்றும் கிரவெட்ஸ்கி என்ற சோவியத் தளபதி கூறுகிறார்.

[அன்னார் 1933-ம் ஆண்டு மே மாதம் வரை சோவியத் ராணுவ வேவு கழகத்திலும், 1933—34-ல் ராணுவ கைத்தொழிற் கல்விச் சாலையிலும், 1935—37-ல் சோவியத்தின் மேற்கு ஐரோப்பிய ஒற்றற் படைத்தலைவராயுமிருந்தார். 1937-ம் ஆண்டு இறுதியில் ஸ்டாலின் தம் சொற்படி முழுதும் கேளாத உடைமை தலைவர்களைத் தூக்கிவிட்டபோது அன்னார் தமக்கும் அக்கதி நேருமென அஞ்சி பிரான்சில் சரண் புகுந்தார். அந்நாட்டினின்றும் அவரைக் கொண்டுபோக ரஷ்ய 'ஆக்பு' ரகசியப் போலீஸ் படையினர் முயன்றனர். எனவே அன்னார் இன்று அமெரிக்காவில் குடியேறியுள்ளார். அவர் இவ்வாண்டு மார்ச்சு மாதத்தில் "ஸாட்டர்டே ஈவினிங் போஸ்ட்" என்ற பத்திரிகையில் எழுதிய கட்டுரைகளின் சாரமும் இதர அமெரிக்கப் பத்திரிகைகளில் வந்தனவைகளின் சுருக்கமும்]

1936-ம் ஆண்டு ஜனவரியில் ஹிட்லர் ஜெர்மனியின் தலைமைப் பதவியை பெற்றதும் கிழக்கிலுள்ள ஜப்பான் தொந்தரவும், தம்மை மன்பதையினின்றும் தனித்து விலக்கி அழித்து விடுமோவென ஸ்டாலின் அச்சங் கொண்டார். ஆகவே ஹிட்லருடன் நட்புக்கொள்ள முயலவே அன்னார் அதற்கு இடங் கொடுக்கவில்லை, ஜார் அரசருக்கும் பிரான்சிற்கு மிருந்த நெருங்கிய உறவைத் திரும்பவும் ஏற்படுத்த முயன்றார். ஆனால் பிரான்சு முன்போல் ரஷ்யாவிடம் அதிக மதிப்பு வைக்காமல் பிரிட்டனையே நம்பியிருந்தது. அந்தோணி ஈடனும், லவாலும் மாஸ்கோ வந்தும் உறுதியான நட்பு பிரான்சினிடமோ, அன்றி இங்கிலாந்துடனோ ஏற்படவில்லை. லிட்வினாப் கூட்டுப் பாதுகாப்புக்கென்றே தயாரிக்கப்பட்டு அதன் மூலமாக ஜெர்மானிய அபிலாஷைகளைத் தடுக்க முயன்றார். அன்னாரும் அமெரிக்கா சென்றார். அதனால் அந்நாடு சோவியத் அரசாங்கத்தை அங்கீகரித்தது. லிட்வினாப் முயற்சி எல்லாம் நிறைவேறவில்லை. அவரின் கூட்டுப் பாதுகாப்புப் பேச்சுக்குப் பெருத்த ஆதரவு பேச்சளவில் காண்பிக்கப்பட்டதே தவிர காரியத்தில் எதுவும் வெளிப்படவில்லை. அதனால் ரஷ்யாவின் கூட்டுப் பாதுகாப்புக் கொள்கைக்குப் பிரமாதமாக விளம்பரம் ஏற்பட்டதைத்தவிர, வேறு பலன் கிடைக்கவில்லை.

1936-ம் ஆண்டு ஜூலையில் பிராங்கோ ஹிட்லர், முசோலினி ஆதரவுடன் கலகத்திற்கு எழுந்ததும் அதனைத் தனக்கு அனுகூலமாக மாற்றிக்கொள்ளத் திட்டம் போட்டவர். மாட்ரிட்டில் தம் சொற்படி நடக்கும் ஓர் அரசாங்கம் இருக்குமேயானால் மத்திய தரைக்கடல் கடற்பாதையை உபயோகிக்கவும், ஜிப்ரால்டர் பாதுகாப்பின் நிமித்தமாகவும் ஸ்பெயின் நேசத்தைப் பிரான்சும் முக்கியமாகப் பிரிட்டனும் நாடுமாதலால் அப்போது






அவை தம்முடன் ஒப்பந்தம் செய்துகொண்டாலேயே ஸ்பெயினை இணங்கச் செய்யலாமென்று கருதினார். ஆனால் அவசரப்படாமல் தமக்குரிய காரியம் நிறைவேறும் வகையிலேயே தலையிடுவதெனத் தீர்மானித்தார். கலகம் எழுந்ததும் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள பொது உடைமைக்காரர்கள் ஸ்பெயினை ஆதரிக்கவேண்டுமெனக் கதறினர். மாஸ்கோவிலுள்ள காமின்டர்ன் அதிகாரிகளும் அவ்வாறே சர்க்காரை ஆதரிக்கவேண்டுமெனக் கூறினார்கள். அதற்கு ஸ்டாலின் செவிசாய்க்கவில்லை. ஸ்டாலின், நாட்டின் அதிகாரங்களையெல்லாம் தம் கைக்குக்கொண்டு வருவதிலேயே கருத்தாயிருந்தார். சோவியத் புரட்சி வெற்றிபெற்ற நாட்களில் காமின்டர்னுக்கிருந்த அதிகாரமும் மதிப்பும் இன்று இல்லை. இருநூறு கோடி ரூபாய் பெருமான தங்கமிருந்தும் ஸ்பெயின் சர்க்காரால் எந் நாட்டினின்றும் தேவையான ஆயுதங்களை வரவழைக்க முடியவில்லை. பிரிட்டன் தொந்தரவால் சமதர்ம லியோன் புளூம் தலைமையிலுள்ள பிரான்சும் மற்ற நாடுகளும் நடுநிலைமை வகிப்பதாகக் கூறிவிட்டன. 1936ம் ஆண்டு ஆகஸ்டு 28ம் தேதி ஸ்டாலினும் ரஷ்யாவினின்று ஆயுதங்கள் ஏற்றுமதி செய்ய தடுத்துவிட்டார். செப்டம்பரில் இரு பொது உடைமைக்காரர்களைக் கொண்ட அரசாங்கம் தம் சார்பில் திருப்பலாமென்ற நம்பிக்கை ஸ்டாலினுக்கு ஏற்பட்டது. ஸ்பெயின் ஐந்தாண்டுகளாக சமதர்ம ஆட்சியிலிருந்தும், தொழிலாளர் அரசாங்கமிருந்தும் அந்நாடு சோவியத் ஆட்சியை அங்கீகரிக்கவில்லை. அந்நாட்டிலுள்ள சமதர்மிகள் அனைவரும் சோவியத் ஆட்சியை வெறுப்பவர். எனவே பொது உடைமைக்காரர்களை கொண்ட அரசாங்கத்திலேயே ஸ்டாலினுக்கு நம்பிக்கை உண்டு. ஸ்பெயின் சர்க்காரும் இலகுவில் பிராங்கோவிற்குப் பணியாதென்பதும் தெரிந்துவிட்டது. அச் சர்க்காருக்கு ஆயுதங்கள் விற்றால் அதனிடமுள்ள தங்கத்தையும் பெறலாமென ஸ்டாலின் முடிவுகட்டினார். ஆனாலும் தாம் தலையிடுவது தெரியக்கூடாதென தம் அதிகாரிகளுக்கு எச்சரித்தார்.

ஸ்பெயின் தங்கத்திற்கு, சோவியத் ஆயுதங்கள் தருவதென முடிவு செய்யப்பட்டது. ஆயுதங்களை ஸ்பெயின் கப்பல்களே எடுத்துப் போவதென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. சோவியத் ஆட்சியில் ஆயுதங்களை விற்கத் தனிப் பட்ட கம்பெனிகள் கிடையாததால் அதற்கென ஒரு கம்பெனிகள் நிறுவப்பட்டு அதன் கிளைகள் பாரிஸ், லண்டன், கோபன்ஹேகன், ஆம்ஸ்டர்டாம், ஜூரிச், வார்ஸா, பிரேக், பிரசெல்ஸ் முதலிய நகரங்களில் ஸ்தாபிக்கப்பட்டன. அக்கம்பெனிகள் பல நாடுகளிலும் ஆயுதங்கள் தென் அமெரிக்க நாடுகளுக்கென ஸ்பெயின் சர்க்காருக்கு ஸ்காண்டிநேவிய கப்பல் மூலமாக அனுப்பி வந்தன.

கடலோனியாவில் எத்தகைய சாமான்களையும் இறக்கக்கூடாதென ஸ்டாலின் உத்திரவிட்டார். அங்குள்ள அரசாங்கம் ஸ்டாலின் ஆட்சியை வேண்டாதாரைக் கொண்டவர்களாதலால் அதற்கு உதவ ஸ்டாலினுக்கு விருப்பமில்லை. மாட்ரிட்டில் தமக்கு அனுகூலமான மந்திரி சபை ஏற்பட ஸ்டாலின் அவசியமானபோதே ஸ்பெயின் பொது உடைமைக்காரர்கள் மூலமாக ஆயுதங்களை விற்றார். அதனால் அந்நாட்டில் பொது உடைமைக்காரர்களுக்கு மதிப்பு ஏற்பட்டது. ஸ்டாலினும் அந்நாட்டின் பொது உடைமைக் கட்சித் தலைவர் ஜோஸ் டையாசுக்குத் தங்கள் கொள்கையின் நிமித்தமாகவே உதவுவதாகத் தந்தி கொடுத்தாரென்றும் முழு உதவி செய்ய முன்வரவில்லை. செய்த உதவிக்கு ஸ்பெயின் தங்கத்தை எடுத்துக்கொண்டார். முசோலினி தலையிட்ட அளவிற்கு ஸ்டாலின் ஈடுபட்டிருந்தால் இன்று பிராங்கோ ஆட்சி இராது. ஸ்டாலினுக்கு ஐரோப்பிய போரில் தலையிடுவதற்கு விருப்பமில்லை. அவ்வாறு தலையிட்டால் அதுவே தருணமென டிராட்ஸ்கி சார்பினரும் எழுவரென்ற பயமுண்டு. ஆனால் ஜெர்மனி, ஜப்பான் பயமிருந்தாலும், அதை ஒழிக்க ஜனநாயக

நாடுகளுடன் சம்பந்தம் செய்துகொள்ளவே முயன்றார். ஆகவே போர் அளவிற்குத் தலையிடாமல் எவ்வளவு தூரம் தகராறுகளுக்கு இடமில்லாமல் உதவலாமோ அதுவரையே அவர் கருத்துடையவரா யிருந்தார்.

அச் சமயத்தில் முதலமைச்சரா யிருந்த கபாலிரோ மாஸ்கோ 'ஆக்பு'வின் கிளை ஸ்தாபனத்திற்கும் ஸ்பெயினில் இடங்கொடுத்தார். உதவி செய்யும் ரஷ்யாவை விரோதித்துக்கொள்ளத் தைரியமில்லை. ஆகவே 'ஆக்பு'வும் மும்முரமாக தனது வேலையைத் தொடங்கியது, ஸ்டாலின் ஆட்சி வேண்டாதாரை ஒழிப்பதில் கவலை செலுத்தியது. பல தேசங்களினின்றும் வந்த தொண்டர்களைக் கொண்ட 'இண்டர் நாஷனல் பிரிகேட்' கிளைபர் என்ற பொது உடைமைக்காரர் தலைமையில் போரிட்டது. அவர் ரஷ்யப் படையைச் சேர்ந்தவராயினும் மக்களுக்குக் காடாதேசத்தவரென்று கூறப்பட்டு தொண்டர்களைச் சோவியத் உத்தரவின்கீழ் கொண்டுவர முயலப்பட்டது. (தொடரும்)



"மாத்ரு பூமி"ல்—பி. யு. சின்னப்பா



# சந்திரனின் கடிதங்கள்

அன்புள்ள ரகுவுக்கு,

உன்னுடைய பதில் கிடைத்தது. நீ சென்றிருந்த கிராமத்தைப்பற்றி விவரித்து எழுதியிருந்தாய். அதைப் படித்தால், நான் போன கிராமத்திலிருந்தது போல் தான் அதுவும் உளது என்று தெரிகிறது. அதனால் பாரத நாட்டில் ஜாதிகளும் பாஷைகளும் வேறுபட்டாலும் இந்திய கிராமம் எங்கும் ஒரே மாதிரியாகத்தானிருக்கிறது என்று புலப்படுகிறது. இந்தியா தேசம் ஒற்றுமையுடைய சுதந்திர நாடாக ஆகும் என்பதற்கு இதுவே அத்தாட்சியன்றோ!

கிராமத்தில் பல்வேறு ஜாதியினர் வாழ்ந்த போதிலும் அவர்களுக்குள் எவ்வளவு ஒற்றுமை யிருக்கிறது பார்! தச்சனும் கருமானும் இல்லாவிடில் விவசாயியின் வாழ்வு கஷ்டந்தான். விவசாயியின் உதவியில்லாவிட்டால் மற்றவருக்குத் திண்டாட்டம். ஒவ்வொரு கிராமவாசியும் மற்றவன் உதவியால் வாழ்கிறான். இது எவ்வளவு பெரிய சமதர்மக் கொள்கை? ஜாதியே தொழில்களைப்பற்றி ஏற்பட்டது என்று தெரிகிறதல்லவா? நமது தேசமே சமதர்மக் கொள்கையுள்ள நாடு.

மறந்து விட்டேனே, நீ பாஸ் செய்து விட்டதாகவும், காலேஜில் சேர்ந்திருப்பதாகவும் எழுதியிருக்கிறாய். மிகுந்த சந்தோஷம்.

கலாசாலைப் படிப்பு அவசியமே. படிப்பதினால் பாமர ஜனங்களுக்கும் நமக்குமுள்ள வித்தியாசம் அதிகம் உண்டாகிறது. அதனால் நமக்கும் ஜனங்களுக்குமுள்ள தொடர்பு விட்டுவிடும். நம் ஜனங்களைக் கண்டாலே இகழ்ச்சியுடன் பார்க்கும் தன்மை ஏற்படுமென்று பலர் கூறுகின்றனர். இது சிறிதளவு உண்மைதான். நம்ம கிட்டு படித்ததிலிருந்து அவன் செய்கை மாறுபட்டிருக்கிறது. மூக்குக் கண்ணாடி போட்டுக்கொள்ளாவிட்டால் நாட்டுப்புறத்தான் என்று கூறுகிறான். இப்பொழுதுள்ள கலாசாலைப் படிப்பு அப்படித்தான். வேலைக்கு என்று படிப்பதைவிட, படிக்காமலிருப்பதே மேல். ஏதோ கொஞ்சம் தெரிந்து கொள்ளலாம், என்ற நினைவுடன் படித்தால் நல்லது. அதிர்ஷ்டமிருந்தால் நல்ல வேலை வரட்டுமே! யார் வேண்டாமென்று கூறுகின்றனர்?

கலாசாலைப் படிப்பில் மேன்மைகளும் அதிக மிருக்கின்றன. இன்று தேசத் தலைவர்கள் யாவரும் கலாசாலையில் படித்தவர்கள்தான். படித்தவனுக்குத் தனி மதிப்புதான்! தொழிற்கல்வி படிக்கவும் கலாசாலைப் படிப்பு அவசியமாகத்தானிருக்கிறது. ஒருவனுக்குப் பிரியம் எதிலிருக்கிறதோ அதில் அவனை முன்னேறச் செய்வதுதான் மேல் நாட்டினர் வழக்கம். உனக்குக் கலாசாலைப் படிப்பில் ஆசையிருப்பதாகச் சொல்லுகிறாய். ஆசையினால் அதையே நன்றாகப் படி! கடவுளின் அருள் கஷ்டப்படும் ஒருவனுக்குக் கட்டாயம் கிடைக்கும்.

இப்படிக்கு,

சந்திரன்.

# இதுவும் ஒரு கதை

(வி. எஸ். எஸ்.)

## 1

எனக்கு ரொம்பகாலமாய் ஒரு ஆசை உண்டு. அது ஒரு சிறு கதை எழுதிவிட வேண்டும் என்ற ஆசைதான். என் வீட்டுக்காரர் மாதாமாதம் கதைகள் எழுதித் தள்ளிக்கொண்டிருக்கிறார். பத்திரிகைகளில் வந்தவுடன் என்னை வாசிக்கச் சொல்லிக் கதையைப்பற்றி என் அபிப்பிராயத்தைக் கேட்பது வழக்கம். எனக்கு என்ன தெரியும்? முதலில் கதை நிரம்பவும் நன்றாயிருக்கிறது" என்று ரத்தினச் சுருக்கமாய்ப் பதில் தருவேன். பின்னர் இயற்கையாகவே சிறு கதைகளின் மேல் எனக்காசை உண்டாகிவிட்டது. எந்த நேரமும் கதைகளையே வாசித்துக்கொண்டிருப்பேன். பின்னர் அவர் எழுதிய கதைகளுக்கும் விமர்சனம் பண்ண ஆரம்பித்துவிட்டேன். ஒரு கதையில் கதாநாயகியைக் காலை ஒடித்து நொண்டியாக்கிக் கதாநாயகனுக்கு கல்யாணம் பண்ணி வைத்து, தலைப்பு "கால் நொண்டி-காதல் நொண்டியல்ல" என்று பேரிட்டிருந்தார்.

இதற்கு நான் "அவளை நிரந்தரமாக நொண்டியாக்கிவிட்டிருக்க வேண்டாம். ஆஸ்பத்திரியில் வைத்துச் சுகமாக்கியிருக்கலாம்" என்று கூறினேன்.

"நீயாக ஒரு கதை எழுதினால் உனக்குத் தெரியும்',என்றார்.

அதிலிருந்துதான் எப்படியாவது அவருக்கு எதிராக ஒரு கதை எழுதிவிட வேண்டுமென்னும் ஆவலால் சரியான தூக்கமும் இன்றிக் கஷ்டப்பட்டேன்.

எப்படி எழுதுவது? எப்படி ஆரம்பிப்பது? எதைப்பற்றி எழுதுவது? என்று ஒன்றுமே தெரியவில்லை. கடைசியில் என் கதையையே எழுதிவிடுவது என்று தீர்மானித்தேன்.

இனிமேல் நான் கதையை ஆரம்பிக்கிறேன். சூரியன் உதயமாகும்போது தான் என் கதையும் ஆரம்பமாகிறது. நான் தாமரைக் குளத்துக்கரையில் ஸ்நானம் பண்ணிவிட்டுக் கையில் பத்துப் பதினைந்து தாமரைப் புஷ்பங்களோடு நின்றுகொண்டிருந்தேன். குளத்தில் தாமரைப் பூக்கள் பாதி மலர்ந்து மலராமலும் அந்தி நேரத்தில் நீலவானத்தில் தோன்றும் மின் மினிமாதிரி பரந்து கிடந்தன. எனக்கு ஒரே ஆச்சரியம்! இவ்வளவு தாமரைப் பூக்களும் இங்கே எப்படி முளைத்தன? எங்கள் தோட்டத்து ஊருணியில் மருந்துக்குக்கூட ஒரு பூ இல்லையே" என்று சிந்தித்துக் கொண்டு நின்றேன்.

அப்பொழுது 'ஜல் ஜல்' என்று மணிச் சத்தம் என் காதிற் பட்டது. கரையில் கிழக்கிலிருந்து ஒரு 'வில்' வண்டி வந்துகொண்டிருந்தது. வண்டியில் பூட்டப்பட்டிருந்த மாடுகள் என் கவனத்தை ஈர்த்தன. இரண்டும் ஒரே கருமயிலை நிறம். இரண்டுக்கும் நெற்றியில் வெள்ளை. இரண்டுக்கும் ஒரே மாதிரியான குப்பிகள் கட்டி ஒரே மாதிரியான கொலுசுகள் போடப்பட்டிருந்தன. நான் இதைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்கும்போதே வண்டி என்னருகில் வந்து நின்றது. நிற்பானேன்? ஒரு சமயம் மாடுகள் ஆளைக்கண்டால் கலையும் போலும் என்று நினைத்துக்கொண்டு தள்ளிப் போனேன். உடனே வண்டிக்காரன் "அம்மா! ராமசாமி முதலியார் தோப்பு எங்கே?" என்று கேட்டான். எனக்கு ஒரே ஆச்சரியம். வண்டி எங்கள் தோப்புக்குத்தான் வந்தது.

"எங்க அப்பாதான்! இதோ பக்கத்தில் தான் இருக்கிறது" என்றேன். என்பதற்குள் வண்டிக்குள்ளிருந்து ஒரு இளைஞன் வெளியிற் குதித்தான். உடனே என்னை உற்றுப்பார்த்தான். எனக்கு வெட்கம் வந்துவிட்டது, குளத்தைப் பார்த்தேன் நான்.





உடனே வண்டிக்காரன் "அம்மா, இது உங்கள் வீட்டுக்குத்தானே போவுது; நீங்களும் வாரீங்களா" என்றான்.

"நான் இந்த ஒத்தையடிப் பாதை வழியாய் வந்து விடுவேன்" என்று சொன்னதும் 'சுடேர்' என்று சாட்டையைச் சுண்டி மாடுகளை ஓட்டினான்.

அந்த இளைஞன் என்னைப் பார்த்தான். நானும் உடனே குறுக்கு வழியாய் வண்டி வருவதற்கு முன்னால் தோப்பிலுள்ள எங்கள் வீட்டை யடைந்தேன்.

"அப்பா! நம்ம வீட்டுக்கு ஒரு வண்டி வருது" என்றதும் அப்பா கையை உதறிக்கொண்டு "மறந்தே போய் விட்டேன்! உன் அத்தான் இன்றுகாலை வண்டிக்கு வருகிறதாக மூன்று நாளைக்கு முன்னதாகவே கடிதம் வந்திருக்கிறது. சரி வரட்டும்" என்றார்.

உடனே பளிச்சென்று எனக்கு விஷயம் விளங்கி விட்டது. என் அத்தை மகன் எங்கள் வீட்டில் இருந்துகொண்டு பக்கத்து ஊரிலுள்ள ஹைஸ்கூலில் படிக்கப் போவதாக என் அப்பாவும் அம்மாவும் பேசிக்கொண்டது ஞாபகம் வந்தது.

எனக்குப் பெரிய வெட்கம். அவரை வாருங்கள் என்று ஒரு வார்த்தை கேட்டேனில்லையே. வந்த மனிதரை வா என்று கேட்காமலிருந்துவிட்டு இனி எப்படி அவர் முகத்தில் விழிப்பது என்று கவலைப் பட்டேன். எனக்கு அவரைத் தெரிந்திருந்தால் நான் பேசாமல் இருப்பேனா என்ன? இதற்குள் வண்டியும் தோப்பில் நுழைந்தது. நான் வீட்டுக்குள் ஓடி விட்டேன்.

## 2

அவர் வந்து பதினைந்து தினங்களாகி விட்டன. நானும் என் தங்கையுமே எங்கள் வீட்டில்; வேறு, ஆண்குழந்தைகள் கிடையாது. எனவே அவர் வந்த பின்னர் எங்கள் வீடு, பிரகாசித்தது. என் தங்கை சீதை, வந்ததும் வராததுமாய் அவரோடு ஒட்டிக்கொண்டு விட்டாள். நானோ அவர் முன்னாற்கூட போகமாட்டேன். ஆனால் மத்தியான ஆகாரம் நான் தான் வண்டியில் கொண்டுவைப்பேன்.

எனக்குத் தோப்பில் இருப்பதுதான் பிடித்தது. அம்மாதான் ஊரை விட்டு விட்டுக் காட்டில் வந்து குடியிருப்பது பிடிக்கவில்லை என்றுசொல்வாள். இங்கே ஒன்றுக்கும் பஞ்சமில்லை. ஜலத்தைத் தோட்டத்துக் கிணற்றிலிருந்தே எடுத்துக் கொள்வோம். துணி துவைக்க ஊருணி இருக்கிறது. வாழை, கத்தரியெல்லாம்பயிர். தென்னைகள் அடர்ந்திருந்ததால் எப்பொழுதும் குளிர்ச்சியாகவேயிருக்கும். மாமரங்கள் கன்றுப் பருவத்திலேயே காய்கள் தந்துவிட்டன. மாடுகள் கட்ட இடம் வசதி. புதிதாய் வந்த வண்டிக்காரன் நல்லவன். தோட்டத்தின் எல்லா பாகத்திலும் ஸ்கூலில் இருந்து புஷ்பச்செடிகள் வைத்துப் பயிராக்கி விட்டான். அவன் பேர் ஷண்முகம். என் பேர் ஷண்பகம். என் அத்தான் ஒருநாள் அவனை ஷண்முகம் என்று கூப்பிட்டார். நான் அம்மாதான் கூப்பிடுவதாக நினைத்துக்கொண்டு "என்ன" என்று கேட்டுக் கொண்டே முற்றத்திற்கு ஓடிவந்தேன். உடனே விஷயத்தை அறிந்துகொண்டு உள்ளே ஓடிப்போனேன். அவர் சிரிக்கும் சப்தம் கேட்டது.

அத்தான் வந்து மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. அம்மா அப்பா சீதை மூவரும் ஒரு கல்யாணத்திற்காக அயலூருக்குச் சென்றுவிட்டனர். அன்று மாலை நேரம் ஷண்முகம் ரோஜாச் செடிகளை வெட்டி விட்டுக்கொண்டிருந்தான். அவனிடம் அத்தான் "அடேய் ஷண்முகம்! நம் ஊருணியைச் சுற்றிக்கற்களைப் போட்டு ஒரு சின்னப்படிக் கட்டும் கட்டி விட்டால் குளிக்க வசதியா யிருக்குமல்லவா" என்றார்.

"ஆமாம் சாமி! ஒரு எத்தத்தையும் போட்டுவிட வேண்டும், தண்ணி இறைவை யாடிக்கொண்டிருந்தால் கொஞ்சம் சுத்தமாகிக்கொண்டே யிருக்கும்" என்றான்.

அந்த சமயத்தில் நான் அங்கு போனேன் "ஷண்பகம், காபி இருந்தால் இங்கே கொண்டுவா" என்றார். எனக்கு ஆச்சரியம். என்னிடம் ஒருநாளும் அவர் பேசியதே கிடையாது. நானும் வெகுநாள்

அவருடன் பேசத் துடித்துக்கொண்டிருந்தேன். இன்றுதான் அது நிறைவேறிற்று. ஆகவே, சட்டென்று சொம்பில் காபியும் டம்ளரும் கொண்டு பக்கத்தில் வைத்துவிட்டு வரப்பார்த்தேன். அதற்குள் என் கையை எட்டிப் பிடித்துக் கொண்டுவிட்டார்.

எனக்கு ஒரே வெட்கமாய்ப் போய்விட்டது. ஷண்முகம் இன்னும் என்னைப் பார்க்கவில்லை. அவனுக்கு வயது இருபத்திநாலு இருக்கும். அவன் பார்த்தால் என்ன நினைப்பான்? நான் மெதுவாகத் திமிறினேன்.

"அடே ஷண்முகம்!ஷண்பகம், ஆப்பிட்டுக்கிட்டாள் இங்கே பார்" என்றதும் அவன், என்னைப் பார்த்துச் சிரித்தான். நான் வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு ஓடி வந்துவிட்டேன்.

அன்று இரவு அவர் சாப்பிட்டுக்கொண்டிருக்கையில் நான் "நீங்கள் அவன் இருக்கையில் அப்படிக் கையைப் பிடிக்கிறீர்களே" எனறு மெதுவாய்ச் சொன்னேன்.

"ஒருவன் இருக்கையில் இப்படிப் பயப்படுகிறாயே! நாளைக்குப் பதினாயிரம் பேர்கள் மத்தியில் உன் கையை ஒருவன் பிடிப்பானே" என்றார்.

நான் அப்பொழுது என்ன சொல்வதென்று தெரியாமல் விழித்தேன். பின்னர் "அதற்காகத்தான் இப்போதே பழகிக் கொள்கிறீர்களோ?" என்று சொல்லிவிட்டுச் சாமர்த்தியமாகச் சொல்லிவிட்டதாக நினைத்துக்கொண்டேன்.

## 3

ஒரு பௌர்ணமி. நானும் சீதையும் மொட்டை மாடிக்குப் போனோம். அவர் மெதுவாக அங்கேவந்தார். இரவு மலர்ந்த புஷ்பங்களினின்றும் வாசனை கம்மென்று ...ந்தது. அந்த சந்திரிகையில் தாமரைக் ...ஜலம் பாதரசத்தைை உருக்கி ...போன்று ஒரே வெண்மையாக ...வும் தெரிந்தது.

... நான் எவ்வளவு காலம் ...யாக இருப்பது?" ...ன்னோடு பேசுவது

"என்ன நானு? சரி இருக்கட்டும்! நான் பரீக்ஷை முடிந்ததும், கொழும்புக்குப் போய்விடுவேன். என்மேல் ஞாபகம் இருக்குமா? இப்பொழுது இருந்தமாதிரிதான் இருப்பாயா?"

எனக்கு உண்மையிலேயே துக்கம் பீறிட்டுக்கொண்டு வந்தது. அவர் எங்கள் வீட்டிலிருப்பதால் நான் எவ்வளவு குதூஹலமாயிருக்கிறேன் என்பதை அவர் அறிவாரோ என்னவோ?

"நீங்கள் ஏன் போகவேண்டும்? இங்கேயே இருந்துவிடலாகாதா. நான் உங்கள்மேல் எவ்வளவு பிரியம் வைத்திருக்கிறேன் என்பதை நான் சொல்லித்தானா நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்? என் கண்களை இழக்கச் சம்மதித்தாலும் சம்மதிப்பேன். கண்ணினும் இனிய உங்களை நான் பிரியமாட்டேன். தங்கள் அருகிலேயே இருக்கவேண்டும் என்று நான் எவ்வளவு ஆவலாய் இருக்கிறேன், நீங்கள் அறிவீர்களா? அம்மா தங்களிடம் பாடம் சொல்லிக்கொள்ளச் சொன்னாள். நானாகத் தைரியமாக உங்களிடம் பேச முடியவில்லை. என் உயிரின்மேல் ஆணை, நீங்கள் இங்கேயே இருக்கவேண்டும்," என்று நீண்ட பாடத்தைப் படித்துவிட்டேன். அப்பொழுது சொன்னவைகளில்கூட சில மறந்துபோய்விட்டன.

அவர் என்னருகில் வந்தார். "ஷண்பகா! நான் இந்த இடத்திற்கு வந்து உன்னையும் கண்டபின்னர் நான் இதை விட்டுப் போவேனா என்ன? உன் மனம் எப்படி என்பதை அறியவே நான் கேட்டேன். இந்த இடம் எனக்கு நிரம்பவும் பிடித்திருக்கிறது. மாமா இந்த இடத்தில் வசிக்க நினைத்தது நம் அதிர்ஷ்டமே" என்றார். எங்கள் இருவர் திருஷ்டியும் ஊருணிப் படிக்கட்டின்மேல் பட்டது. அதில் போயிருந்து சந்திரன் நிழலை அதனுள் பார்க்கவேண்டுமென்று ஆசை வந்தது.

"அதோ அந்தச் சந்திரனைப் பார்த்தீர்களா? உண்மையில் எனக்கு" என்றேன்.

"ஷண்பகா ஏது நீ பெரிய கதைகளில் ........."



சீதை எங்கள் அருகில் கல்மேல் படுத்திருந்தவள் எழுந்து என் கன்னத்தைத் தடவி "அக்கா, உன் கன்னத்தில் ஏன் ஈரமாயிருக்கிறது" என்றாள்.

பாவம் அது அறியாக்குழந்தைதானே!

"ஒன்றுமில்லை" என்றேன்.

அதேசமயம் அம்மா "சீதே! இந்தா அத்தானுக்கு இந்த சுக்கு கஷாயத்தைக் கொண்டுபோய்க் கொடு" என்று உரக்கச் சொன்னாள்,

அவள் கீழேபோனாள். இதுவரைக்கும் என் பின்னால் ஒளிந்து நின்ற அவர் என் அருகில் வந்து உட்கார்ந்தார்.

இப்பொழுதும், அவர் என் அருகிலேயேதானிருக்கிறார்.


ஈரோடு

டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டு.

O. P. No. 60-39

கிருஷ்ணம்மாள்
லக்ஷ்மி அம்மாள் } மனுதாரிகள்

ராமசாமி செட்டி
கோபால்சாமி செட்டி } எதிர் மனுதாரர்கள்

ஈதா. கொல்லங் கோவில் கிராமம் காஞ்சி கோவிலில் இறந்து போன ராமசாமி செட்டியார் பாரியை சுப்பம்மாளுக்கு வரவேண்டிய நிலுவைகளை வசூலிக்க ஷையாள் பெண்மக்களான மனுதாரர்கள் தங்களுக்கு வார்சு பாத்ய சர்டிபிகேட் கொடுக்க மனு செய்து அது 7-10-39ல் வாய்தா போடப்பட்டிருக்கிறபடியால் ஆக்ஷேபணை யுள்ளவர்கள் தெரிவித்துக் கொள்ளலாம்.

என். வி. சுதர்சனம்

14-9-39. மனுதாரர்கள் வக்கீல்



லைப் அஷ்யூரன்ஸுக்கு:

நியூ கார்டியன் ஆப் இந்தியா லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

மதறாஸ்.

இக்கம்பெனி புதிய இன்ஷ்யூரன்ஸ் சட்டத்தின் விதிப்படி எல்லாக் கம்பெனிகளுக்கும் விதித்துள்ள தொகையான 2-லக்ஷம் ரூபாய்த் தொகையை முன்பே அடைந்திருக்கிறது.

இக்கம்பெனி எல்லோருடைய விருப்பங்களையும் பூர்த்திசெய்யும் திட்டங்களுடன் கூடியது. இதன் பாலிஸி நிபந்தனைகள் எல்லோருக்கும் உகந்தது.

அஷ்யூரன்ஸைப் பற்றியாவது, ஏஜென்ஸி நிபந்தனைகளையாவது தெரிந்துகொள்ள வேண்டுமானால் தலைமை ஆபீஸுக்காவது, ஜில்லா அல்லது இன்ஸ்பெக்டர் ஆபீஸ்களுக்காவது எழுதிக் கேட்டுக் கொள்ளலாம்.

தலைமை ஆபீஸ் மவுண்ட்ரோடு, மதறாஸ். என். நாராயணன் மானேஜர்.

# பத்மா

(மாலதி)

நான் இருப்பது ஸ்ரீரங்கம். என் பெயர் பத்மா. என் பிதா அதிக தனவந்தர். என் தாய் சிறு வயதிலேயே மரித்து விட்டாள். என்னை என் பிதா, தன் தாயின் உதவியாலும் வேலையாள்களின் உதவியாலும் தகுந்தபடி போஷித்து வந்தார்.

சிறு வயது முதலே என் மனம் சுறுசுறுப்பான வேலைகளையே நாடுவதாயின. பள்ளி மாணவிகளில் நானே முதன்மையானவள். என் தலைமை வாத்தியார்முதல் யாவரும் என்னைப் புகழ்வது வழக்கம்.

ஓடி விளையாடுவதோ பாடுவதோ எந்த விளையாட்டிலும் முதல் 'ப்ரைஸ்' என்னுடையதே. இவ்விதம் பத்து வயது வரை சந்தோஷத்துடன் இருந்தேன். பதினேராம் வயது ஆரம்பத்திலேயே திருமணம் செய்து விட்டார்கள்.

அத்தையின் செல்வப்பிள்ளை ராமு. "படித்தால் குழந்தைக்குச் சூடாய்விடும். ஒருத்தனுக்குப் போதாதா இருக்கும் ஆஸ்தி? படிச்சவாள்ளாம் வேலைக்குத் தாளம் போடறு! படிக்காமலே, இருக்காத்தை வச்சுண்டு எனக்குப் பிள்ளையா ஆயுசுடன் இருந்தாப் போதும்" எனச் சொல்வாள் அத்தை, அத்தனை அருமை.........

அருமையாய்த்தான் வளர்ந்தான் ராமு. ஆனல் செல்லப்பிள்ளை 'செக்குமாதிரி வளரவில்லை. ஒற்றைநாடிச் சரீரம். சிவந்த மேனி. சினிமாவுக்குத் தகுந்த முக வெட்டு. பெண்ணுய்ப் பிறந்திருந்தால் எவனுவது கண்வைத்திருப்பான் பாத்தியம் கொண்டாடி. ஆனல் அதுதான் இல்லையே எனக்காகவே பிறந்திருக்கும் போது.........

இவ்வளவு மனம் வைத்து உடன்பிறந்தான் நம்ப பிள்ளைக்குப் பெண் கொடுத்தானே, நம்ப மாட்டுப்பெண் அப்படி இப்படி என்று பீத்திக்கொள்ளலாம் என்பது அத்தையின் பெருமை!

"என்ன பதினைந்து வயசுதானே ஆகிறது! தானே பெரியவனுனல் சரியாய் இருப்பான். இரண்டு வருஷம் மூன்று வருஷம் எத்தனையோ பையன்கள் 'பைல்' ஆகவில்லையா? என்ன நம் சொத்தும் அவனுக்குத்தான். நம்ம குழந்தையோ நல்ல புத்திசாலி. அவனை நன்ருய் வழிக்குக் கொண்டு வருவாள், எப்படித்தான் இருந்தால் என்ன? இனி என்ன செய்வது? அம்மா மனம் திருப்தியாய் விட்டது" என்று எண்ணினர் அப்பா.

என் கலியாண அழைப்புச் சீட்டு உபாத்தியாயினிகளுக்கும் அனுப்பியிருந்தார் அப்பா. அவர்கள் அனைவரும் ஆவலுடன் என்னிடம் கொண்ட அன்பால் மணக்கோலத்துடன் இருந்த என்னைக்கட்டி அணைத்துக்கொண்டு பல பல பேசலானர்கள். எனக்கு மட்டும் அப்பா இவர்களை எல்லாம் ஏன் அழைத்தார் என்றிருந்தது.

'பத்மா, பாவம், தாயில்லாக் குழந்தை; அப்பாவின் செல்லப் பெண்; புருஷன் நல்ல சந்தோஷத்தைக் கொடுக்க வேண்டும்; பகவான் காப்பாற்ற வேண்டும்,' என்று கூறித் தலைமை உபாத்தியாயினி 'ஒரு வெள்ளிப் பெட்டி' பரிசு அளித்தாள். பெட்டியைப் பார்த்தது அது. 'டேய் கோபு, என் பெண்டாட்டி கெட்டிக்காரியாம். அதுக்கு வாத்தியாரம்மா பரிசு கொடுக்கராடோ! வெள்ளிப்பெட்டிடா...அதோ பாருடா'; என்று அசடு வழியக் கத்திற்று. அப்போ என் மானம் ஆகாயத்திலேயே பறந்து விட்டது.

உபாத்தியாயினிகள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்களே, அவர்கள் முகக்குறி எத்தனை அர்த்தத்தை அறிவித்தது? பதின் மூன்று வயதுவரை வீட்டிலேயே படித்து வந்தேன்; அப்பாவும் வைதிகப் பற்றுடையவர். நானும் தற்கால நாகரீகத்தில் ஈடு





பட்டவளில்லை. தனிமையில் அப்பா சில சமயம், 'ஏன் என் புத்தி இப்படிச் சென்றதோ—' குழந்தைக் கேற்ற கொழுநன் இல்லையே!' என்று எண்ணுவார். நீதி அறிவிக்கும் கதைகள் கட்டுரைகள் இவற்றையே படிக்கும்படி போதிப்பார்.

'கல் ஆனுலும் கணவன் புல் ஆனுலும் புருஷன், என்பதை அடிக்கடி வற்புறுத்திச் சொல்லுவார். "கண்டா ரிகழ்வனவே காதலன் தான் செய்திடினும் கொண்டானை, அல்லால் அறியாக் 'குலமகள்போல்,' என்பதை கற்புடைய பெண்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். பத்மா உனக்கில்லையம்மா. நீதான் புத்திசாலி உனக்கு நான் ஒன்றும்சொல்லவேண்டாம். இருந்தாலும் அப்பா என்னும் முறையில் இத்தனை நாள் உன் வீட்டிற்கு வந்தேன்! இனி நீ நல்லபெண் என்றுபேர் எடுக்கும் வரை உன் வீடு வரமாட்டேன்" என்று விசனம் கலந்த ஒரு பெருமூச்சு விடுவார்.

என் குடித்தனம் என ஏற்பட்டது முதல் எவ்வளவோ துயரத்திற்கும், கஷ்டத்திற்கும் பாத்திரமானேன். அப்பா வைத்த, கம்பெனி முழுகிவிட்டது. அத் துயரத்தால் அப்பா மரித்தார். அத்தை படுத்த படுக்கையாய் ஏழு வருஷம் கிடந்தாள். வெள்ளாமை கிடையாது. வாய்தா தொந்தரை பொறுக்க முடியாது. தொழில், செய்ய வகையறியாத புருஷன்! பகல் உண்டால் இரவிற்கு என்ன செய்வதென்னும் ஸ்திதி! ஒரு நகை யில்லாமல் விற்ருய்விட்டது.........எல்லாம் என் அதிர்ஷ்டம் தான்......

என் புருஷனை யாரும் அசடு என்று சொல்லக்கூடாதுஎன்பது என்எண்ணம். "அய்யோ பாவம்! கூடை நகையும் குச்சலியப் பொட்டும்னு, அத்தனையும் கொடுத்துடுத்து! தாலிச் சரட்டிற்கு வேறு சரடில்லை! இந்தக் காலத்திலே இப்படி யாரு இருக்கா.........வேணும் வேணும்னு கொடுத்தா!! என அனுதாபத்துடன் கேலி செய்பவர் சிலர்.

"ஆஸ்தியும் பாஸ்தியும் வேணுது தான் இருந்தது; கொஞ்சங்கூட அதிர்ஷ்டமில்லையே...என்ன செய்வது?" என்பர் சிலர். இப்படியெல்லாம் என்னை நேரிலேயே கேட்கும்போது என்மனம் படும்பாட்டை ஈசன்தான் அறிவார். என்ன செய்வது? என்னையே நொந்து கொள்வேன்.

—"பத்மா புருஷன் என்னடி பண்ருன்?'! என்ருள் கனகா. நான் பின்னல் வருவதை அறியாமல் சொன்னுள் சுந்தரி. "என்ன பண்றது!......

இந்த ஊரிலே தான் இருக்கே தொழில் கோவில் பூசை! பூசை, தான் பண்ருன்......" பிறகு என்னைக் கண்டு, திடுக்கிட்டு, அவர்கள் மனம் மாறுதலடைவதைக் கவனியாதவள்போல் இருந்தேன் நான்.

"என்னமோ, அவர் குணசாலி என்னும் பெயர் கிடைத்துவிட்டது. சம்பாதிப்பது அவரவர் அதிர்ஷ்டத்தைப் போலிருக்கிறது. குணத்தைப் பார்! அது ஒன்றே போதும். குடித்தனக்காரர்கள் இப்படி இருந்தால் எத்தனை நாள் இருந்தாலும் சலிப்பில்லை." என்பார் வீட்டுச் சொந்தக்காரர். அவர் குணம் எனக்கல்லவா தெரியும்?


"நான் செய்த புண்யம் அவர் யாருடனும் அதிகமாய்ப் பேசுவது கிடையாது! எதையாவது உளறிவைக்காமல்—அந்த மட்டில் நம் பாக்யம்தான்" என்று நினைப்பேன்.

நாளடைவில் வீட்டுப் பொறுப்பு கொஞ்சம் ஏற்பட வாரம்பித்தது. உலக அனுபவம், எத்தனை ஏற்படுகின்றதோ அத்தனைதான் மனமும் விசாலமடையுமென்பது என் எண்ணம். அவருக்குத்தான் ஒன்றுமே பிடிக்காதே......அப்பொழுது.

வெளியில் கொஞ்சம் சாயங்காலம் சுற்ற ஆசை; சினிமா பார்க்க ஆவல், ராஜீய விஷயங்களைப் படிப்பதில் பற்றுதல்; இப்படியாக ஒரு வருஷம் கடந்தது.

இன்று — எல்லோரையும் போல் தானும் இல்லையே என்னும் ஏக்கம்; சென்ற காலத்தைப்பற்றிய சிந்தனையின் துயரம்; துள்ளித் திரிகின்ற காலத்தில் என் துடுக்கடக்கிப் பள்ளிக் கனுப்பாம லிருந்து விட்டார்களே, என்னும் பரதவிப்பு......இதே.......எண்ணம்........ முன்னுக்கு.........நாம் எல்லோரையும் போல்.....பெருமையுடன்......வரவேண்டும்......இதே கங்கணம் கட்டிக்கொண்டவர்போல்......ஆனர்...

காங்கிரஸ் தலைவர்கள் பிரசங்கம் எங்கானாலும் சரி, முதலில் ஆஜர்! சனாதனிகள் சச்சரவோ ? அங்கும் முதலில்! ஹரிஜன முன்னேற்றம், ஆம். அதுவே, இவர் பணியாகக் கொண்டார். "ஏன்? நாம் அவனிலும் கீழ்மையாகவே இன்றுவரை இருந்தோமே, உலக மறியாமல்" என நினைத்தார்...ஹரிஜனப் பள்ளிக்கூடத்தில் வேலைக்கமர்ந்தார். தம் சரித்திரத்தையே .. ஒரு புத்தகமாக வெளியிட்டார்......'அடிமை அடிமையே தான்; சாகும்வரை சாகுபடி செய்வது தான்...சாண்வயிறு நிறையாமல் தவிப்பதும் அவன்தான்! சுகம் அனுபவிப்பவர் எஜமான்! சோற்றுக்கு அல்லல்படுவோன் அடிமை. இந்த நினைவும் சிந்தனையும் தான் — இப்போதெல்லாம்! என்றும் அடையமுடியாத லக்ஷயத்தை அடைந்து விட்டதாய்ப் பெருமை யடைகிறேன் நான்.....இன்று!




ஸ்மிக்லி ரிட்ஸ் :—

1914ம் வருஷம் போலந்துடன் யுத்தஞ் செய்து வெற்றிபெற்ற சேனைத் தலைவன். இவரும் ஸிகோர்ஸ்கியும் சேர்ந்து ரஷ்ய சேனையைப் பல இடங்களில் முறியடித்திருக்கிறார்கள். விதுவேனியாவிட மிருந்து வில்னு என்னுமிடத்தையும் கைப்பற்றிக் கொண்டான்.

ரிட்ஸினுடைய ராஜீயக் குரு ஜெர்மனியில் சிறைப்பட்டிருக்கும்பொழுது போலந்தைச் சீர்திருத்துவதில் முனைந்திருந்தான். அவரைத் தற்கால போலந்தின் சிருஷ்டி கர்த்தா வென்றே கூறலாம். அவனுடைய தைர்யத்தையும், வீர்யத்தையும் பற்றி இன்றும் போலந்துக்காரர்கள் பெருமையாகப் பேசிக் கொள்வார்கள்.

ரிட்ஸ் யுத்த வீரன் மட்டுமல்ல, ஓர் சைத்திரிகனுமாவான். இயற்கையையே தன்னுடை சித்திர ஆலயமாகக் கொள்வான். இப்பேர்ப்பட்டவரைச் சேனைத் தளகர்த்தாக ஏற்படுத்திய பில்ஸுட்கியின் மூளையே மூளை!






# பணத்தால் வந்த பழி

(எஸ். ஸோமாஸ்கந்தன்)

கங்காதரனுக்கு வெகு நாட்களாகப் பிள்ளையில்லை. கங்காதரனும் அவன் மனைவியும் இந்தக் குறையை நிவர்த்திக்க வேண்டி காசி, ராமேசுவரம் முதலிய க்ஷேத்திரங்களுக்குப் போனார்கள்; விரதம் அநுஷ்டித்தார்கள். அநேக வருஷங்களுக்குப் பிறகு அவர்களுக்கு ஒரு புத்திரன் பிறந்தான். புத்திரனைக் கண்டதும் அவர்களிருவரும் அடைந்த ஸந்தோஷத்துக்கு எல்லை இல்லை. குழந்தை மிகவும் அழகாயிருந்தது. கங்காதரனும் அவன் மனைவியும் அவனைச் சீராட்டி மிகுந்த அன்புடன் தங்கள் உயிரினும் மேலான பொருளாக மதித்து அவனுக்கு "குணசீலன்" என்று பெயரிட்டு வளர்த்து வந்தார்கள்.

கங்காதரனுக்குக் கொஞ்சம் சொத்திருந்தது. அவன் அதிகம் படிக்கவில்லை. ஆனால் குணசீலனுக்குத் தக்க வயது வந்ததும் அவனைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துப் படிக்க வைத்தான். குணசீலன் சிரத்தையுடன் படித்து வந்தான்.

குணசீலன் பள்ளிக் கூடத்திலிருந்து வந்ததும், அங்கு தான் படித்தவைகளைத் தாய் தந்தையரிடம் சொல்லி மகிழ்வான். இதைக் கேட்டு கங்காதரனும் அவன் மனைவியும் மிகுந்த ஸந்தோஷமடைவார்கள்.

ஒரு நாள் குணசீலன் பள்ளிக்கூடத்திலிருந்து வரவில்லை. வெகுநேரமாகியும் அவனைக் காணாமையால் கங்காதரன் ஊர் முழுவதும் தேடினான். அவன் எங்கும் அகப்படாமையால் மிகுந்த வருத்தத்துடன் வீட்டுக்கு வந்தான். அவன் மனைவி பரபரப்புடன் வந்து—"எங்கே குழந்தை குணசீலன்?" என்று கேட்டாள்.

கங்காதரன்—"குணசீலன் எங்கு போனான் என்றே தெரியவில்லை. தெருத் தெருவாயலைந்து ஊர்முழுவதும் தேடி விட்டேன்! பள்ளிக்கூடத்திலும்விசாரித்தேன். அவன் வழக்கம்போல் பள்ளிக் கூடத்தை விட்டதும் நேரே வீட்டுக்குத்தான் வந்தான்—என்று உபாத்தியாயர்கள் சொல்கிறார்கள். என்ன செய்வது?"—என்று சொல்லி விசனப்பட்டான்.

அவன் மனைவி இதைக் கேட்டதும் "ஐயோ! எங்கே போனான் என் கண்மணி குணசீலன்? இனி நாம் அவனை விட்டு எப்படி உயிர் வாழ்வது? இப்படிப் பறி கொடுப்பதற்குத்தானா காசி—ராமேசுவரம் முதலிய க்ஷேத்ரங்களுக்குச் சென்று அவனை யடைந்தோம்?" என்று கதறினாள்; பித்துப் பிடித்தவள்போல் ஆனாள்.

அப்பால் இரண்டுமாதங்கள் சென்றதும் குணசீலனிடமிருந்து கடிதம் வந்தது. கங்காதரன் மிகவும் ஸந்தோஷத்துடன் கடிதத்தைப் படித்துவிட்டு— மனைவியை யழைத்து—"குழந்தை குணசீலன் கடிதம் எழுதியிருக்கிறான்! கூலி ஆள் சேர்க்கும் கங்காணி யொருவன் அவனைச் சிங்கப்பூர் அழைத்துச் சென்று விட்டானாம்; ஐந்து வருஷங்களுக்கு உடன்படிக்கைச் சீட்டு எழுதி வாங்கிக் கொண்டிருக்கிறானாம். குழந்தை சிங்கப்பூரில் சௌக்யமாய் இருக்கிறான். ஏதாவது கொஞ்சம் பணம் அனுப்பவேண்டும்.

கஷ்டமாயிருக்கிறது என்று எழுதியிருக்கிறான்—" என்றான்.

இதைக் கேட்டதும் அவன் மனைவி மிகவும் ஸந்தோஷ மடைந்து — "அப்படியா? என் கண்மணி சௌக்யமாயிருக்கிறானா? பணம் அனுப்புங்கள்! அவன் வருவதற்கு ஐந்து வருஷங்களாகுமா? ஐயோ! என்ன செய்வது?" என்று வருந்தினாள்.

கங்காதரன் உடனே குணசீலனுக்குப் பணம் அனுப்பினான். குணசீலன் பணம் வந்து சேர்ந்ததற்குக் கடிதம் எழுதித் தான் வருவதற்குப் பத்து வருஷங்கள் ஆகுமென்று எழுதியிருந்தான்.

இவ்விதம் சில வருஷங்கள் சென்றன. கங்காதரன் பெருத்த கடன் தொந்தரவுக்குள்ளானான். கடனை யடைக்க வேறு வழியில்லாமல் காணி, வீடு முதலியவைகளை விற்றுக் கடனை யடைத்துவிட்டுத் தானும் தன் மனைவியுமாக ஒரு குடிசை ஏற்படுத்திக்கொண்டு அதில் வசித்து வந்தான். சோற்றுக்கடை வைத்து அதில் வரும் ஊதியத்தைக் கொண்டு இருவரும் ஜீவனம் செய்து வந்தனர். இதைக் குணசீலனுக்கு எழுதினால் அவன் வருந்துவான் என்றெண்ணி கங்காதரன் அவனுக்கு எழுதவில்லை. அடிக்கடி குணசீலனிடமிருந்து கடிதம் வந்து கொண்டிருந்தது; பணமும் அனுப்பிக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் இரவு கங்காதரன் வீட்டுக்கு ஒரு வாலிபன் வந்தான். அவனுக்கு வயது 25 இருக்கும்; அழகிய முகத் தோற்றமுடையவனா யிருந்தான். கங்காதரன் அந்த வாலிபன் வந்ததும் அவனை வரவேற்றுச் சாப்பாடு போட்டான்.

வாலிபன்—"ஐயா, நாழிகையாய் விட்டது! இன்றிரவு இங்கே படுத்துக் கொண்டிருந்து காலையில் எழுந்து போகலாம் என்று பார்க்கிறேன். நீங்கள் ஒரு உதவி செய்ய வேண்டும். இதோ இந்தப் பையில் 10,000 ரூ. பணம் இருக்கிறது. இதை ஜாக்கிரதையாய் வைத்திருந்து நாளைக்காலையில் நான் கேட்கும் பொழுது கொடுங்கள்."

கங்காதரன்—"நீங்கள் கவலையின்றித் தூங்குங்கள்! காலையில் எழுந்து போகலாம். பணம் எங்கும் போகாது. நான் பத்திரமாய் வைத்திருந்து காலையில் கொடுக்கிறேன்;" என்று கூறிப் பணப் பையை வாங்கிக்கொண்டு போய் மனைவியிடம் கொடுத்தான்.

வாலிபன் சற்று நேரத்துக்கெல்லாம் அயர்ந்து தூங்கி விட்டான். இரவு 3 மணியாய் விட்டது. கங்காதரனுக்குத் தூக்கம் வரவில்லை! உடனே மனைவியையெழுப்பி அந்தப் பணப்பையைக் கொண்டுவரச் சொன்னான். இருவரும் பணப்பையை யவிழ்த்துப் பார்த்தனர். அதில் 10,000 ரூபா நோட்டாக இருந்தது! கங்காதரனுக்கு இதைப் பார்த்ததும் மனம் மாறிவிட்டது! உடனே மனைவியைப் பார்த்து "நாம் இந்த வாலிபனைத் தீர்த்துவிட்டு ஏன் இந்தப் பணத்தையெடுத்துக்கொள்ளக் கூடாது? இந்தப் பத்தாயிரம் ரூபாயை நாம் எந்த ஜன்மத்தில் மொத்தமாகக் காணப் போகிறோம்?" என்று கேட்டான்.

"கொலை செய்வதா? ஐயோ! அகப்பட்டுக்கொண்டால்?"

"அசடே, உனக்கென்ன தெரியும்? இந்த அரிய சந்தர்ப்பத்தை இழந்துவிடக் கூடாது! அந்தப் பெரிய அரிவாளை எடுத்துக்கொண்டு வா! நன்றாய்த் தூங்குகிறான்! இதுதான் நல்ல சமயம்! சீக்கிரத்தில் வேலையை முடித்து ஒருவருமறியாதபடி பிணத்தை நம் வீட்டுப் பின்புறத் தோட்டத்தில் புதைத்துவிடுவோம்!"

பணம் என்றால் பிணமும் வாய்திறக்குமல்லவா? அவன் மனைவியும் பணத்தாசையால் தூண்டப்பட்டு அதற்கிசைந்தாள். வாலிபன் என்றும் விழித்துக் கொள்ள முடியாத கடைசித் தூக்கத்தை யடைந்தான்!

வாலிபன் வரும்பொழுது கையில் ஒரு சிறு பெட்டியுடன் வந்திருந்தான். அந்தப் பெட்டியையே தலைக்கு வைத்துக்கொண்டு படுத்திருந்தான். அந்தப் பெட்டியில் என்ன இருக்கிறதென்று





அறிய ஆவல்கொண்டு கங்காதரன், பெட்டியைத் திறந்து பார்த்தான். அதில் அவ் வாலிபனுடைய உடுப்புகள் இருந்தன. அடியில் சில கடிதங்களை ஒன்றாகச் சேர்த்துக் கட்டி வைத்திருந்தான். கங்காதரன் தன் மகன் குணசீலனுக்கு எழுதிய கடிதங்கள்! ஆம்! அவைகள் தான் நிச்சயமாய்! சில புத்தகங்கள் இருந்தன! அவைகள் மேல் "குணசீலன்" என்ற பெயர்! ஆம்! அவன் கையெழுத்துத்தான்!

இதைப் பார்த்ததும் கங்காதரன் "ஐயோ, குழந்தை குணசீலனைக் கொன்றுவிட்டோம்!" என்று அலறிக் கொண்டே கீழே விழுந்தான். அதே சமயத்தில் இன்னொரு பரிதாபகரமான குரல் "ஐயோ! குணசீலனையா?" என்று அலறியது இந்த சப்தத்தை மறைத்துவிட்டது! இந்தக் கூக்குரலினால் ஊரார் கூடினார்கள். கங்காதரன் தோட்டத்தில் வாலிபனைப் புதைத்த இடத்திற்குப் போய் வெட்டி எடுத்துப் பிணத்தை வெளியிலே போட்டான்.

"அட பாவி, என் நண்பன் குணசீலனையா கொன்றுவிட்டாய்? ஐயோ! நேற்றுக் காலை என்னிடம் குணசீலன்-"என் தாய் தந்தையர்களுக்குத் தெரியாமல் ஒரு வழிப்போக்கனைப்போல் சென்று, இரவு அங்கேயே சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொண்டிருந்து காலையில் எழுந்ததும் என்னை வெளிப்படுத்திக்கொள்ளப் போகின்றேன்!" என்று சொன்னான். அநியாயமாகப் பணத்தாசையால், பெற்றபிள்ளையைக் கொன்றுவிட்டீர்களே!" என்று அன்பும் இரக்கமும் கலந்து துக்கம் நெஞ்சை யடைக்கப் பரிதாபகரமாக ஒரு குரல் கதறிற்று கூட்டத்தில்!

போலீஸார் வந்து பிணத்தை அப்புறப்படுத்திவிட்டு, கங்காதரனையும் அவன் மனைவியையும் கைது செய்து அழைத்துச் சென்றனர்; கோர்ட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்டது. ரூ. 10,000மும் அரசாங்கத்தில் சேர்க்கப்பட்டது. "பணத்தால் வந்த பழி" இது!


நோட்டீஸ்

மன்னார்குடி டி. மு. கோர்ட்டு

1939ளு S. C. No. 179

ஆ. கோ. சொக்கலிங்கச் செட்டியார்—வாதி

1. ராமய்யர்
4. குண்டுமணியம்மாள் } 1, 4 பிரதிவாதிகள்

வாதிக்கு 1 2 பிரதிவாதிகளும் 4-ம் பிரதிவாதியின் புருஷன் இறந்த பக்கிரிசாமி பிள்ளையும் சேர்ந்து 12-4-36-ல் ரூ. 400-க்கு எழுதிக் கொடுத்திருக்கும் பிராமிஸரி நோட்டுப்படி பிரதிவாதிகள் பேரில் தாவா செய்து பிரதிவாதிகளுக்கு அறிக்கை ஸம்மன்கள் போனதில் 1 & 4 பிரதிவாதிகளுக்கு சார்வாகாததால் 4-ம் பிரதிவாதி சம்மனை ஷை கோர்ட்டு வாசலிலும் ஷையார் கடைசியாய் குடியிருந்த நன்னிலம் தாலூகா கொரடாச்சேரியில் லெட்சுமாங்குடி போகும் ரோட்டிலுள்ள வீட்டு வாசல் கதவிலும் ஒட்டி சார்வாகியுமிருக்கிறது. பிரதிவாதி சம்மனையும் அவர் கடைசியாய்க் குடியிருந்த இடமாகிய வலங்கிமான் டி. மு. இலாகா கும்பகோணம் தாலூகா திப்பராயபுரம் கிராமத்தில் வலங்கிமானிலிருந்து கும்பகோணம் போகிற ரோட்டில் Choklet கம்பெனி வைத்திருக்கும் வீட்டு வாசல் கதவிலும் ஷை ம. டி. மு. கோர்ட்டு வாசலிலும் ஒட்டி சார்வு செய்யும்படி உத்தரவாகி ஷை நெம். வருகிற 1939ளு அக்டோபர்மீ 9உ ஷை நெம். ஈரங்கி போடப்பட்டிருக்கிற விபரம் இதனால் அறியக் கோருகிறேன். ஆக்ஷேபனையுள்ளவர்கள் ஷை தேதியில் ம. டி. மு. கோர்ட்டில் ஆஜராகித் தெரிவித்துக் கொள்ளலாம்.

(Sd.) S. கோபாலய்யர்,
வாதி வக்கீல்.

# பாலவைத்தியம்

குழந்தைகளை (1) க்ஷீரபன் (தாய்ப்பால் மட்டும் ஆகாரமாக இருப்பவன்) (2) க்ஷீரான்ன தன் (அதாவது தாய்ப்பாலும் அன்னமும் உண்பவன்) (3) அன்னதன் (அன்னத்தை உண்பவன்) என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம். தாய்ப்பாலின் கெடுதியாலும், ஆகாராதிகளின் தோஷத்தாலும் குழந்தைகளுக்கு வியாதிகள் ஏற்படுகின்றன. ஆகையால் சிறு குழந்தைகளுக்கு ஏற்படும் வியாதிகளுக்குக் காரணம் தெரிந்து கொள்வதற்குத் தாய்ப்பாலையும் பரீக்ஷை செய்ய வேண்டும். சுத்தமான தாய்ப்பால் சுத்தமான ஜலத்துடன் கலந்தால் நன்கு சேரும்.

வாதத்தால் தூஷித்திருக்கும் பால் தண்ணீரில் விட்டால் மிதக்கும், நுரையுடன் கூடியும், துவர்ப்பு ருசியுடனும், இருக்கும். இதைப் பருகுவதால் குழந்தைக்கு மல பந்தம் உண்டாகும்.

பித்த தோஷத்தால் கெட்ட பால், தண்ணீரில் மஞ்சள் நிறமான கோடுகளுடன் காணப்படும். பால் சிறிது உஷ்ணமாகவும் புளிப்பு ரஸத்துடனும் இருக்கும். எரிச்சலை உண்டாக்கும்.

கப தோஷத்தால், பால் ஜலத்தின் அடிப் பாகத்தில் போய் தங்கும். உப்பு ரஸமுள்ளதும் கொழுப்புடனும், வழவழப்புடனும் இருக்கும்.

எல்லா தோஷத்தினாலும் கெட்டுப்போயிருக்குமாயின் எல்லா தோஷங்களுடைய லக்ஷணங்களும் கலந்திருக்கும்.

ஸ்தன்ய தோஷ நிவர்த்திக்காக, தாய்க்குச் சிகிச்சை செய்யும் முறை:—முன் சொன்ன வாத தோஷத்தால் கேடான ஸ்தன்யத்துக்கு தசமூல கஷாயம், தசமூல கிருதம் இவை சாப்பிட குணமாகும்.

பித்தத்தால் கோளாறடைந்த பாலுக்கு :—சீந்தில் கொடி, தண்ணீர் விட்டான், பேப்புடல், வேம்பின் பட்டை, சந்தணக் கட்டை இவை கஷாயம் அல்லது இவைகளைச் சேர்த்துக் காய்ச்சிய நெய் பருகி வருவதால் குணமாகும்.

கப தோஷத்திற்கு :—அதிவிடயம், கோரைக் கிழங்கு, வசம்பு, காட்டுத் திப்பிலி வேர், காட்டு மிளகின் வேர், சித்திர மூலம், அரிசித் திப்பிலி, சுக்கு இவைகளைக் கஷாயம் செய்து சாப்பிட்டுவர குணமாகும். இம்மூன்று தோஷங்களின் நிவர்த்திக்காக பேதிக்கும் கொடுத்து வரவேண்டும்.

ஸ்தன்ய ரோக நிவர்த்திக்காகஸ்தனங்களின் மேல் பூச்சுக்கான சில முறைகள் :—பில்வ வேர், அதிமதுரம், நன்னாரி, சதகுப்பை, தேவதாருக்கட்டை இவற்றில் எதாகிலும் ஒன்றை நன்கு அரைத்து ஸ்தனங்களின் மேல் பூசி 1 மணி நேரம் ஆனபிறகு நன்றாகக் கழுவி, பின்பு குழந்தைக்குப் பால் ஊட்ட வேண்டும்.

வாத பித்த கப சேர்க்கை (ஸன்னிபாதம்) தோஷங்களால் கோளாறடைந்த பாலைப் பருகுவதால் குழந்தைக்கு க்ஷீராலஸகம் என்று ஒரு கடும் வியாதி ஏற்படுகிறது. அதனால் குழந்தைக்கு ஜீர்ணமாகாமல் பலவித நிறங்களுடன் மலம் கழியும். நீர் மஞ்சள்நிறமாகவும், அல்லது வெண்மையாயும், கெட்டியாயும் இறங்கும்; ஜ்வரம் முதலியவைகளும் ஏற்படும். க்ஷீராலஸக வியாதிக்கு, தாய்க்கும் குழந்தைக்கும் வமன சிகிச்சைசெய்து வைக்கவேண்டும். பின்பு அரிசித் திப்பிலி, வட்டை திருப்பி, நிலவேம்பு, கோரைக்கிழங்கு இவற்றைத் தூள் செய்தோ அல்லது கஷாயம் செய்தோ சாப்பிட்டு வரலாம். இதேபோல் வசம்பு, கோரைக் கிழங்கு, தேவதாருக் கட்டை, சுக்கு, அதிவிடயம், கடுக்காய்த்தோல் இவைகளையும் குடிநீர் செய்து சாப்பிடலாம்.

குழந்தைகளுடைய நோய்களின் நிதானத்தை அதிக அநுபவத்தால் தெரிந்து கொள்ள வேண்டும். நோயின் பலாபலத்தை அழுவதின் வேகத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். குழந்தைக்கு எந்த பாகத்தில் வலி இருக்கிறதோ அங்கு கைகொண்டு தடவவும். கண்மூடியிருப்பின் தலைவலி இருக்கிறதென்று தெரிந்துகொள்ளலாம். நாக்கு உதடுகள் இவற்றைக் கடிப்பதினாலும், மூச்சு திணறுவதாலும், கை சேஷ்டையினாலும் ஹிருதயத்தில் இருக்கும் வியாதியை அறிந்து கொள்ளலாம். மலபந்தம், வாந்தி, பால் உண்ணாமை, வயிற்றில் இரைச்சல், உப்புஸம் முதலியவைகளால் வயிற்றின் கோளாறுகளைத் தெரிந்து கொள்ளலாம்.

மல மூத்திர பந்தம், பயம், நாலா பக்கமும் மிரண்ட பார்வை இவற்றால் வஸ்தி அல்லது (மூத்திரப்பை) குஹ்யம் (அபானத்வாரம்) இவற்றின் கோளாறு என்று அறியலாம்.






குழந்தைகளுக்குப் பல் முளைக்கும் ஸமயம் பேதி, வாந்தி, ஜ்வரம், இருமல், கண் நோய் முதலியன வரும். அவற்றிற்கு லகுவான மருந்துகளைத்தான் கொடுக்கவேண்டும். அச்சமயம் குழந்தைகளை மருந்துகள், பத்தியம் இவற்றால் அதிகம் கஷ்டப்படுத்தக் கூடாது. பல் முளைத்த பின்பு வியாதிகள் தானாகவே நீங்கி விடும்.

பல் சீக்கிரமாகவும் நன்றாகவும் முளைப்பதற்காக முளைக்கும் ஸமயம் ஈறுகளில் காட்டாத் திப்பூ, நெல்லிமுள்ளி, அரிசித்திப்பிலி இவற்றைப் பொடிசெய்து தேனில் குழைத்துத் தடவி வரவேண்டும் ஷை பல் முளைக்கும் கால் உண்டாகும் வியாதிகளுக்கும், குழந்தைகளின் எல்லா வியாதிகளையும் கண்டிக்கக்கூடியதும், புஷ்டிக்கு ஏற்றதுமான "பாலாஷ்டகம்" என்னும் மருந்து கொடுப்பது நலம்.

பாலாஷ்டக சூர்ணம் :—4. மஞ்சள் 2. தேவதாருக்கட்டை 3. ஸரஸதேவதாரு 4. யானைத்திப்பிலி 5. சிறுவழுதிணைவேர் 6. கண்டங்கத்திரி வேர் 7. மூவிலைவேர் 8. சதகுப்பை இவை ஸம இடை எடுத்து நன்கு தூள்செய்து சீலையில் இட்டு ஜலித்து வைத்துக் கொண்டு இரண்டு குன்றி முதல் 15 குன்றி வரையில் தேனில் குழைத்துக் காலையில் கொடுத்து வரலாம். சரீர புஷ்டிக்காகக் கொடுக்கும்போது நெய்யும் சேர்ந்து கொடுக்கவேண்டும்.


மயர்ஸ் பம்புகள்

உலகப் பிரசித்திபெற்றவை




அநேக விதமான
கைப் பம்புகள்
பவர் பம்புகள்
ஸ்பிரே பம்புகள்

எவ்விதமான ஜலப் பிரச்னையையும்
தீர்க்கக்கூடியவை.

மற்றும் ஸ்டோவர் கெரஸின்
& க்ரூடாயில் என்ஜின்கள்,
விண்டு மில்கள்.

விவரங்களுக்கு எழுதுங்கள்.

இந்தியாவின் ஏஜண்டுகள்:

வாடர்ஸ் ஸப்ளை ஸ்பெஷலிஸ்ட்ஸ் லிமிடெட்,

தபால் பெட்டி 202, :: 1-173, பிராட்வே, மதராஸ்.

# மளிகைக்கடை மாணிக்கம் செட்டி

(ஜி. பாலசுப்பிரமண்யம்)

அதுவும் உசிதமாகவே மாணிக்கம் செட்டியாருக்குத் தோன்றிற்று. கொட்டையூரிலுள்ள வியாபாரத்திலும் மாணிக்கம் செட்டியாருக்கு எள்ளு சரக்கு சம்பந்தமாய் நல்ல அனுபோகமுண்டாகையால் இதை அவர் காதில் போட்டதும் அவர் உடனே அதை அங்கீகரித்தார்.

மறுநாள் காலையில் கம்பெனி ஆபீசுக்கு இம் மூவரும் வந்து உடன் எள்ளுக்கும் ஆர்டர் கொடுத்துவிட்டார்கள். முன் தினம் ஆர்டர் கொடுத்த அரிசியும் அன்று வந்து அதை அன்றைக்கே கொழும்புக்கு ஏற்றுமதி செய்து அது சம்பந்தமான ரயில் ரசீதையும் உண்டியலையும் பாங்குக்கு அனுப்பி வசூல் செய்து தங்கள் கணக்கில் வரவு வைத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார்கள்.

அன்று சாயந்திரம் வக்கீல் இராமலிங்க அய்யர் கம்பெனி ஆபீசுக்கு வந்தார். இரண்டு நாள் நடந்த விஷயங்களையும் விவரமாய் மாணிக்கம் செட்டியார் அவரிடம் சொன்னார். தன் மருமகன் எழுதிக்கொண்டிருந்த கணக்கைப் பிரித்து இராமலிங்க அய்யர் பார்த்தார். கணக்குகள் மிகவும் ஒழுங்காய் எழுதப்பட்டிருந்தன. தனக்குள்ளே அதைக் கண்டு இராமலிங்க அய்யர் சந்தோஷமடைந்தார். அவர் மகனும் அவருடனேயே கும்பகோணத்திலே இருந்தமையால் தன் மருமகன் ராமுடுவைத் தன்னுடன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போக ஆசைப்பட்டார். மாணிக்கம் செட்டியாரைப்பார்த்து,'செட்டியார்வாள், ராமுடுவை இன்று நான் என்னுடன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போக ஆவலுள்ளவனாக இருக்கிறேன், தாங்களும் இதற்கு சம்மதித்து ஊருக்குப் போனவுடன் அவர் தகப்பனாருக்கும் இதைச் சொல்லிவிடுகிறீர்களா'' என்று கேட்டார்.

**மாணிக்கம் செட்டியார்** :—அதற்கென்ன, தாங்கள் அப்படியே செய்யலாம், நான் வீடு போய்ச் சேர்ந்ததும் அவன் தகப்பனாரிடம் சொல்லிவிடுகிறேன்.

**ராமுடு** :—"தகப்பனார் அனுமதியில்லாமல் நான் இங்கு தங்கக் கூடாது. நாளைக்கு அவரிடம் சொல்லிவிட்டு நாளையதினம் இங்கு வேலையானவுடன் அவ்விடம் வருகிறேன்" என்று தன் மாமனைப்பார்த்துச் சொன்னான். இராமலிங்க அய்யரும் அதற்கு இணங்கி,'' "நாளை தவறாமல் இங்கு இருக்கும்படி தகப்பனாரைக் கேட்டுக்கொண்டு வரவேண்டும். செட்டியார்வாள்; ராமுடு தன் தகப்பனாரைக் கேட்க சங்கோஜப் பட்டாலும்.படுவான். தாங்கள் நேரில் அவரைப் பார்த்துச் சொல்லுங்கள்!''

## அத்தியாயம் 4

அன்று காலை வழக்கம்போல் மூவரும் கம்பெனி ஆபீசுக்கு வந்தார்கள். அவர்கள் வந்து சற்று நேரத்திற்கெல்லாம் அவ்வூரிலுள்ள சில்லரை வியாபாரிகளில் மூன்று நான்கு பெயர்கள் அவர்களைப் பார்க்கவந்து தாங்கள் ஒவ்வொருவரும் இவ்வளவு மூட்டை எள்ளு எடுத்துக்கொள்வதாக வாக்களித்துவிட்டு அதற்கு அச்சாரமாக சொல்ப தொகையும் கொடுத்தார்கள். அப்படி அட்வான்சாகக் கொடுத்தவர்களில் இரண்டு பேர்வழிகள் இதர பாங்க் செக்காக கொடுத்திருந்தார்கள். மாணிக்கம் செட்டியார் ரொக்க ரூபாயைத் தன் பெட்டியில் வைத்துக்கொண்டு, செக்குகளை அந்தந்த பாங்கியில் கொண்டுபோய்ப் பணம் வாங்கிக் கொண்டு வரும்படி ராமுடுவிடம் கொடுத்தனுப்பினார். ராமுடு அதில் ஒரு செக்கை மாத்திரம் மாற்றிக்கொண்டு மற்றொரு செக்கை மாற்ற முடியவில்லை என்று திருப்பிக் கொடுத்துவிட்டான்.

**மாணிக்கம் செட்டியார்** :—"ஏன் இந்தச் செக்குக்குப் பணம் கொடுக்கமாட்டேனென்று சொல்லிவிட்டார்கள்? முதல் முதல் நம்மிடம் வியாபாரம் செய்ய வரும்போதே, தகரார் செய்யும்படியான செக்கைக் கொடுத்துவிட்டாரே அந்தப் பேர்வழி! அவர் கணக்கில் பணமில்லாமல் இருக்கும்போது செக்கை நம்மிடம் கொடுத்து ஏமாற்றுகிறார் போலிருக்கிறது!"

**ராமுடு** :—"அப்படி இல்லை, அது 'கிராஸ்டு' செக்கு. (crossed cheque.) இதோ பாருங்கள். செக்குக்குக் குறுக்கே இரண்டு கோடுகள் போடப்பட்டிருக்கின்றன. இந்த 'கிராஸ்டு' செக்குகளுக்குப் பாங்கர்கள் நேரே பணம் கொடுக்கமாட்டார்களாம். அவைகளைக் கணக்கில் வரவு வைத்துக்கொள்ளலாமாம். அல்லது இதர பாங்கர்கள் மூலமாய் வந்தால் அப்போது அந்தப் பாங்கர்களுக்குப் பணம்கொடுப்பார்களாம். இதில் மோசம் ஒன்றுமில்லை. நான் விவரம் விசாரித்துவிட்டு வந்துவிட்டேன். நாம் நமது பாங்கில் இன்று பணம் நமது கணக்குக்காகச் செலுத்தும் சமயத்தில் இந்தச் செக்கையும் அத்துடன் சேர்த்துக் கொடுத்துவிட்டால் அந்தத் தொகையையும் சேர்த்து நமது கணக்கில் வரவுவைத்து விடுவார்களாம். மற்றொரு செக்குக்கும் நாம் போய்ப் பணம் வாங்கிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. உள்ளூரிலேயுள்ள இதர பாங்க் செக்குகள் எதுவாயிருந்தாலும் நமது கணக்குக்காக வரவு வைத்துக்கொள்ள அனுப்பினால் அவர்கள் தாங்களே வசூல் செய்து நமது கணக்கில் வரவு வைத்துவிடுகிறார்கள்.

**மாணிக்கம் செட்டியார்** :—" அப்படியா. நமக்கு வசூல் செய்யும் வேலையில்லாமல் போய்விடுகிறது. ஆனால் 'கிராஸ்' செய்யாமலிருந்தால் என்ன? அதனால் என்ன நமக்கு சாதகம்?''

**ராமுடு** :—'கிராஸ்' செய்தால் அந்தச் செக்குத் தொகையை ஒருவர் கணக்கில் தான் வரவு வைத்துக் கொள்வார்கள். தாங்கள் 'கிராஸ்' செய்யாத ஓர் செக்கை ஏதாவது காரணம் பற்றி இழந்துவிட்டு ஒரு அயோக்கியன் கையில் அது அகப்பட்டுவிட்டால், அவன் அந்தச் செக்கு யார்பேரால் எழுதப்பட்டிருக்கிறதோ, அவர் கையெழுத்தை 'போர்ஜரி' செய்து பாங்கில் செக்குகளை ஒப்புக்கொண்டு போய்விட ஏதுவாகுமாம், பாங்கர்கள் அம்மாதிரி 'போர்ஜரி! செக்குகளை ஒப்புக்கொண்டு தொகையைக் கொடுத்துவிட்டால் அவர்கள் அதற்கு ஜவாப்தாரியாக மாட்டார்களாம். 'கிராஸ்' செய்துவிட்டால் அந்தத் தொகையை ஒருவர் கணக்கு மூலமாய்த்தான் வாங்க முடியுமென்று ஏற்பட்டிருக்கிறபடியால் ஒருவரும் அந்தச்செக்குப் பணம் வாங்கமுடியாது ஏனெனில், அப்படி வாங்கியவர் எந்தக் கணக்கு மூலமாய் வாங்கியிருக்கிறார் என்ற விஷயம் சுலபமாய்த் தெரிந்துவிடும். அந்த சௌகரியம்தான் 'கிராஸ்டு' செக்குகளுக்கு இருக்கிறது.''

**மாணிக்கம் செட்டியார்** :—இது மிகவும் மெச்சத் தக்கது. நான் கொட்டையூரிலிருக்கும்போது ஓர் காரியஸ்தன் மூலமாய்ப் பணம் கொடுத்தனுப்பி அந்தக் காரியஸ்தன் பணத்தைத் தானே, எடுத்துக்கொண்டு ஓடிப்போய் விட்டான். அதற்குப்பிறகு அவன் அங்கு வரவே இல்லை. நானும் பாங்கில் கணக்கு வைத்துக்கொண்டிருந்தேனேயானால் 'கிராஸ்டு' செக்காகவே அனுப்பி இருக்கலாம். இந்த விவரம் முன்னமேயே எனக்குத் தெரியாமல் போய்விட்டது. ஆனால் பாங்கில் கணக்கு இல்லாமலிருக்கும் ஒருவருக்கு 'கிராஸ்டு' செக் ஒருவர் அனுப்பியிருந்தால் அதற்கு எவ்வாறு தொகை வாங்குகிறது?

**ராமுடு**:—"கணக்கில்லாமலிருந்தால் பாங்க் கணக்கு வைத்திருக்கும் தன் சிநேகிதரிடம் அனுப்பி அவர் மூலமாய் அந்த கிராஸ்டு செக்குக்குப் பணம் வாங்கிக்கொள்ளலாம். அந்த சிநேகிதர் தன் கணக்கில் அந்த கிராஸ்டு செக்கை வரவு வைத்துக்கொண்டு அவர் தன் சொந்த செக் ஒன்றை எழுதிக் கொடுத்து அந்தத் தொகையை வாங்கிக்கொண்டு விடுவார். அது சம்மந்தமாய்ப் பிறகு ஏதாவது தகரார் வந்தாலும் இன்னார் கணக்கு மூலமாய் அந்த செக்கு வரவு சிலவு செய்யப்பட்டிருக்கிறது என்று சுலபமாய்த் தெரிந்துவிடும். செக்குகளை 'கிராஸ்' செய்வதின் முக்கியமான பிரயோஜனம் இதுதான்,'' என்றான்.

**மாணிக்கம் செட்டியார்** :—சரி! இதுவும் வெகு சௌகரியம்தான், இராமலிங்க அய்யர் அவர்கள் வரும்போது எனக்கும் சொந்த முறையில் ஓர் கணக்கு பாங்கில் வைத்துக் கொள்ளலாமா வென்று கேட்கவேண்டும். கையில் கொஞ்சம் தொகை சேர்ந்திருக்கிறது.

இப்படிப் பேசிக்கொண்டிக்கையில் இராமலிங்கய்யர் அங்கு வந்தார்.




## பாலந்தும் அதன் பெருமையும்.

தற்காலம் ஐரோப்பாவில் முன்னேற்ற மடைந்திருக்கும் நாடுகளில் போலந்தும் ஒன்று எனச் சொல்வதில் ஆச்சர்யமில்லை. நாகரீகத்திலும், நடையுடை பாவனைகளிலும், பழக்க வழக்கங்களிலும், மிகவும் சீர்திருத்தமடைந்து பிற நாடுகளுக்கு ஓர் உபமானமாக விளங்கும் போலந்தின் சிறப்பு போற்றத்தக்கதே. பூமி தான் சூரியனைச் சுற்றுகிறது என்று முதன் முதலில் பாமர ஜனங்களுக்குத் தெரிவித்த கோபர்னிகர் பிறந்த நாடு; கண்ணுக்கெட்டாத தூரம் வியாபித்திருக்கும் சமுத்திரத்தையே தன்னுடைய கதைகளுக்கு ஆதாரமாகக் கொண்ட ஜோஸப் கான்ருட் பிறந்த நாடு; ரேடியம் என்னும் விலைமதிக்க முடியாத உலோகத்தைக் கண்டுபிடித்து நோபல் பரிசு பெற்ற க்யூரி என்ற மாதரசி பிறந்த நாடு— இத்தகைய நாடு தற்காலம் ஓர் பெரும் புயலில் அகப்பட்டுத் தத்தளிக்கிறது.

போலந்தின் ஜனத்தொகை இன்னும் 15 வருஷங்களில் பிரான்ஸைத் தோற்கடித்து விடும்போலிருக்கிறது. அத்துடன் உணவுக்கு வேண்டியவையும் அதிகரிக்குமெனத் தோன்றுகிறது. 'போலிஷ்காரர்கள் கைத்தொழில்களிலும் விவசாயத்திலும் தேற்சி பெற்றவர்கள். இவர்கள் கூட்டங்கூட்டமாய்க் கிராமங்களில் வசித்து வருகிறார்கள். இவர்களுடைய முக்கியமான ஆகாரம் உருளைக் கிழங்கே. ஆனால் வார்ஸாபோன்ற நகரங்களில் ஜனங்கள் நாட்டுப்புறங்களில் வசிப்பவர்களைக் காட்டிலும் கொஞ்சம் மேன்மையான வாழ்வையே அநுபவிக்கிறார்கள்.

பதினாறும் நூற்றாண்டில் போலந்து கருங்கடலிலிருந்து பால்டிக் கடல் வரையிலும் வியாபித்து ஐரோப்பாவில் ஓர் உன்னதப் பதவியை யடைந்திருந்தது. ஆனால், நாளடைவில் அரசனுடைய மதிப்பு குன்றியும் ஜனங்களின் மனப்போக்கு மாறியும் வரவே, அந்நாடு க்ஷீணதசையை யடைய ஆரம்பித்தது. நாட்டில் அமைதி குறையவே ஆங்காங்குள்ள பிரபுக்களின் தன் தலை நாட்டாமை ஆரம்பித்தது. சிறிது காலத்திற்குப் பிறகு அவர்களுக்குள் சண்டை சச்சரவுகள் ஏற்படவே, வேட்டை நாய்கள் போல சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்த ரஷ்யா, ஆஸ்திரியா, பிரஷ்யா, இம் மூன்று நாடுகளும் ஒன்று சேர்ந்து போலந்தின் ஒரு பாகத்தைப் பறித்துப் பங்கிட்டுக் கொண்டார்கள். மற்றொரு பாகத்தை ரஷ்யா தன் பாதுகாப்பில் எடுத்துக்கொண்டது.

இவ்வாறு கி. பி. 1793ம் வருஷம் எதிரிகளின் கையில் சிக்கிய போலந்து, சென்ற மஹா யுத்தம் வரையிலும் அவர்களிடமே சிறைப்பட்டிருந்தது. அதற்குமேல் ரஷ்யாவுடன் இரண்டு வருஷம் நடந்த சண்டையின் பலனாக அந்நாடு சுயேச்சை யடைந்து ஐரோப்பாவிலேயே விஸ்தீரணத்தில் ஆறாவது தேசமாக விளங்கி வருகிறது.

ஓர் பக்கம் ஹிட்லரின் ஜெர்மனி. மற்றோர் பக்கம் ஸ்டாலின் ரஷ்யா. நடுவிலுள்ள போலந்து நாஸீஸம், கம்யூனிஸம் முதலியவைகளில் ஈடுபடாமலிருப்பது ஆச்சர்யமே. ஆனால் போலந்துக் காரர்கள் வைராக்யமே குடிகொண்டவர்கள்; தங்கள் நாட்டின் பூர்வ மஹிமையை உணர்ந்தவர்கள்; தங்கள் உயிர் போனாலும் சுயநாட்டை அந்நியர்களிடம் பறிகொடுக்க மனமில்லாதவர்கள். இவ்விஷயத்தில் இவர்கள் சீனர்களைப்போல் இருக்கிறார்கள்.

(ராய்ஸ்வீக்லி.)

218893



அழகிய
கவர்ச்சி பொருந்திய
கேசம். இனிமேல் மந்தமான
உயிரற்ற பார்வையில்லை.



அதி சீக்கிரமாகவும் சுலபமாகவும் அழகிய அடர்ந்த பட்டுப்போன்ற ஒளி வீசும் கேசம் காஸ்டரால் தைலம் உபயோகப்படுத்தி வளரும்பொழுது எதற்கு கேசத்தை ஒளி மழுங்கியும் வசீகர மில்லாமலும் வைத்துக் கொள்ளவேண்டும்? காஸ்டரால் மாசற்றது, சுத்தமானது, எவ்வளவு தடவைகள் உபயோகப்படுத்தினாலும் கேசத்திற்கு எவ்வித கெடுதலும் வாராது.

காஸ்டரால்






ஒரே முறையில்
நிவர்த்தி


"கால், இடுப்பு, முதுகு இங்கெல்லாம் வலியால் என் மனைவி இரண்டு வருஷம் கஷ்டப்பட்டாள். சிநேகிதர்கள் யோசனைப்படி, கடைகளில் கிடைக்கும் பேடண்ட் மருந்துகளை கொடுத்தேன் பலனில்லை. கஷ்டம் அதிகமாகி வருகையில் இன்னொரு ஸ்நேகிதர் லோத்ரா கொடுக்கும்படி கூறினார். வரவழைத்துக் கொடுத்தேன். முதல் டோஸிலேயே நிவர்த்தி ஏற்பட்டது.

ஷண்முகம் பிள்ளை,
பாங்கர், ஈரோட்."

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :—

கேசரிகுடீரம்
ராயப்பேட்டை, மதராஸ்.







மைசூர் சந்தன சோப்.

*Edited & Published by K. S. Venkataramani at No. 312, Thambu Chetty Street, Madras and Printed by T. K. Venkatesan at The Jupiter Press, 16, Sembudoss Street, G. T., Madras*